# மக்கள் கலைஞன்
# பாலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் கலைஞன் பாலா...

**10.05.2022**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்


பாலா என்னும் நாமம் கொண்டு
ஊர் ஊராய்த் திரிந்து
ஒடுக்கப்பட்ட மக்களுக்காய்
குரல் கொடுத்த நாயகரே...
அல்லும் பகலும் அலுப்பின்றி
மக்களுக்காய் உழைத்தவரே...
மலையகம், தமிழகம்
தாய்நாடெங்கும்
நட்புகளைத் தேடிப்பெற்ற
நற்பண்பு கொண்டவரே..
துணைவிக்குத் துணையாய் நின்று
உறவுகளுக்கு உதவி செய்து
வாழ்வென்றால் என்னவென்று
எமக்குக் கற்றுத் தந்தவரே...
எமக்கெல்லாம் தந்தையாய்
நல்லதோர் வழிகாட்டியாய்
வாழ்ந்த, வாழப்போகும் உங்களுக்கு
மனைவி, பிள்ளைகள்
உறவுகள் கூடிநின்று
உங்கள் சரித்திரத்தை
சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**வீரபத்திரர் கோவிலடி,**
**கோப்பாய் தெற்கு.**

**மனைவி,**
**மக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# சரவணை பாலசிங்கம்

(தோற்றம் : 21.06.1948 மறைவு : 09.04.2022)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திரு. சரவணை பாலசிங்கம் அவர்களின் பயணப் பாதையிலிருந்து சில பதிவுகள்...

"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்க்கு
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க வாழ்ந்தவர். மரணத்தின் பின்பும் வாழ்ந்து கொண்டிருப்பவர் அமரர் திரு.ச.பாலசிங்கம் அவர்கள்.

தென்கோவையூர் உதயதாரகைக் கிராமத்திலே (ஆதித்தன்வளவு, நித்தானிலுப்பை) வனப்புமிகு இயற்கைச் சூழலையும் வயல் வெளிகளையும் கொண்ட குளிர்ச்சியான அக்கிராமத்தின் முதற்குடிகளில் ஒன்றான பொன்னு-செல்லமுத்து தம்பதியினரின் வழியில் அவர்களின் மகளான சின்னாத்தை பெற்றெடுத்த மகள் தங்கத்திற்கும் கொடிகாமத்தைச் சேர்ந்த சரவணை அவர்களுக்கும் ஏற்படுத்தப்பட்ட திருமண பந்தத்தின் பலனாக 1948ம் ஆண்டு ஆனி மாதம் 21ம் நாள் திரு.பாலசிங்கம் கோப்பாய் மண்ணில் அவதரித்தார். இவருக்கு தம்பியாக திருஞானம் அவர்களும் பிறந்து தாய் தந்தையுடன் பிள்ளைகள் இருவருமாய் வறுமையிலும் செழுமையாக வாழ்ந்தவர்கள்.

துடிப்புமிக்க பிள்ளையாய் வளர்ந்து கொண்டிருந்த பாலா ஆரம்பக்கல்வியை கற்க அடம்பிடித்து மறுத்தார். தாயின் செல்லப்பிள்ளையாய் அவரையே சுற்றியே இருந்தார். பாலா அவர்களின் பெருமதிப்பிற்குரிய ஆசான் செல்லையா அண்ணனே அவரை வற்புறுத்தி மூன்றாம் வகுப்பு வரை தூக்கிச்சென்றே C.C.T.M பாடசாலையில் படிக்கவைத்தார். காலப்போக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கல்வி பாலாவிற்கு பழகிப்போக நான்காம் ஆண்டிலே பாடசாலைமட்ட கட்டுரைப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டதும் மிகவும் உற்சாகமடைந்த பாலா இதுபோல பலகட்டுரைகளை எழுத வேண்டும் என்று ஆவல் கொண்டார். கல்வியில் தன்னை நெறிப்படுத்திக்கொண்டிருந்த செல்லையா அண்ணனிடம் ஆர்வத்தோடு கணித பாடத்தைக்கற்று அப்பாடத்தில் பெரிய கெட்டிக்காரன் ஆனார். ஐந்தாம் வகுப்புவரை C.C.T.M இல் கல்வி கற்று ஆறாம் வகுப்பிலிருந்து கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கல்வியினைத்தொடர்ந்தார்.

தாயின் அரவணைப்பினாலும் தந்தையின் அறிவூட்டலாலும் புடம்போடப்பட்டு ஆர்வத்துடன் கற்றலில் ஈடுபட்டார். கணிதப்பாடத்தில் மிகவும் கெட்டிக்காரனாக இருந்த பாலாவிடம் சக மாணவர்கள் கணிதபாடத்தைக் கற்று பரீட்சைகளில் நல்ல புள்ளிகளைப் பெற்றனர். பாடசாலையில் பலகட்டுரைகளை எழுதி பலரதும் பாராட்டுக்களைப் பெற்று பாலா எழுத்தாளன் என்ற நிலையை நோக்கி வளரவும் தொடங்கினார்.

தனது சமூகம் தீண்டாமைக்கொடுமையால் துன்புறுவதை அனுபவித்து உணர்ந்த பாலா அதற்கு எதிராகவும் சிந்திக்க தொடங்கினார். அவ்வேளையில் தன் பாடசாலை விடுதியில் தங்கிப் படித்துக்கொண்டிருந்த மானிப்பாயைச் சேர்ந்த தங்கமலர் மேல் காதல் கொள்கின்றார். சமூகமாற்றத்திற்கான சிந்தனையையும் தங்காமேல் கொண்ட பேரன்பையும் ஒன்றையொன்று பாதிக்காதவாறு தன்னைத்தானே நெறிப்படுத்திப் பயணித்தார். S.S.C (G.C.E O/L) பரீட்சையில் சித்தியடைந்த போதிலும் உயர்தரக் கல்வியைத்தொடராது தீண்டாமைக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரான போராட்டங்களில் தன்னை இணைத்துக்கொண்டார்.

கோப்பாய்க்கிராமத்தில் குடிசைக் கைத்தொழிலாக நெசவுத்தொழிலை செய்து வந்து சுப்பிரமணியத்துடன் இணைந்து நெசவுத்தொழிலைச் செய்து வந்தார் பாலா. நண்பன் சுப்பிரமணியத்திற்கும் அதே இடத்தைச்சேர்ந்த உயர்சாதிப் பெண் ஒருவருக்கும் ஏற்பட்ட காதல் விவகாரத்தில் அப்பெண் கிளிநொச்சியில் வைத்து உறவினர்களால் மண்ணெண்ணை ஊற்றிக் கொழுத்தி கொல்லப்பட்ட உண்மைச் சம்பவமானது பாலாவின் உள்ளத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

சிறு வயதில் பள்ளிப்பராயத்தில் மோசமான சாதிக்கொடுமையால் பாதிக்கப்பட்ட பாலா அடிக்கடி பல அவமானங்களுக்கு உட்பட்ட வலி அவரைப் போர்க்குணம் கொண்டவராக வளர்த்துவிட்டது. சங்கானை, மட்டுவில், மாவிட்டபுரம், அச்சுவேலி, நெல்லியடி, கன்பொல்லை, மந்துவில் போன்ற இடங்களில் நடைபெற்ற சாதிப்போராட்டங்களில் தன் நண்பர்களுடன் இணைந்து மிகத்தீவிரமாக ஈடுபட்டார்.

சாதிக்கொடுமையால் மிகவும் பாதிக்கபட்டிருந்த கோப்பாய் கிராமங்களின் விடிவிற்காகவும் போரடத்தலைப்பட்டார். அதற்காக தன்நண்பர்களுடன் இணைந்து கடும்முயற்சி எடுத்தபோதும் அன்று கோப்பாயில் வாழ்ந்த நிலப்பிரபு சி.கதிர்வேற்பிள்ளையால் தடைப்படுத்தப்பட்டது. கதிர்வேற்பிள்ளையின் நிலத்தில் சிறுசிறு குடிசைகள் அமைத்து அவரின் நிலங்களிலே தினக்கூலிகளாக வேலைபார்த்து வந்த மக்களை கதிர்வேற்பிள்ளை நேரடியாக சென்று தன் காணியை விட்டு வெளியேற்றுவேன் என


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிரட்டியதால் அம்மக்கள் பாலாவின் போரட்டத்தை எதிர்த்தனர். வேறுவழியின்றி பாலாவும் அவர் நண்பர்களும் அப்போராட்டத்தை தற்காலிமாகக் கைவிட்டனர்.

அக்காலப்பகுதியில் தீண்டாமைக்கு எதிராக ஆற்றுகைப்படுத்தப்பட்ட "கந்தன் கருணை" என்னும் நாடகத்தால் பாலா மிகவும் ஈர்க்கப்பட்டார். மக்களின் பிரச்சினைகளைப் பேசி அதற்கு தீர்வுகாணும் ஓர் ஆயுதமாக நாடகத்தைப் பயன்படுத்தமுடியும் என்ற உண்மைய கந்தன் கருணை நாடக செயற்பாட்டினூடாக நன்கு உணர்ந்து கொண்ட பாலா 1976ஆம் ஆண்டு தனது அரங்க செயற்பாட்டை ஆரம்பித்தார். தனது நண்பன் சுப்பிரமணியத்திற்கு நடந்த கொடுமையை மையக்கருவாகக்கொண்டு "சமுதாய மாற்றத்திலே" என்ற நாடகத்தை தயாரித்து மேடையேற்றினார். இந்நாடகம் மக்களை எழுச்சியுறச்செய்தது. இளைஞர்களை இணையவைத்து அப் போரட்டங்களில் பங்குபெற வைத்தது.

ஒடுக்கப்பட்ட மக்களின் நிலமற்ற பிரச்சினைக்கு தீர்வுகாண்பதன் மூலமே சாதிப்பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும் என்ற கீழைக்காற்று இயக்கத்தின் கருத்தியலை உள்வாங்கி கீழைக்காற்று இயக்கப் போராளியாக செயற்பட்டார். இந்த இயக்கம் உரும்பிராய் வடக்கில் ஓர் வாலிபர் சங்கத்தை தோற்றுவிக்க அதில் பாலாவும் ஓர் அங்கமானார். ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைபற்றிய பிரச்சாரம் செய்வதற்கு நாடகம் ஒன்றை தயாரிக்கும் பொறுப்பு திரு பாலா அவர்களிடம் ஒப்படைக்கபட்டது. இப்போராட்டங்களுக்கு மத்தியில் தங்காவுடனான காதல் உணர்வுகளை நெறிப்படுத்திய பாலா தங்கமலர் அவர்களை திருமணம் செய்து தன் குடும்ப வாழ்விலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டார். திரு.பாலாவினது வாழ்க்கை முறையும் தங்கமலர் அவர்களினது வாழ்க்கை முறையும் வெவ்வேறாக இருந்தமையால் ஏற்பட்ட சிக்கல்களை வென்று அவரில்லாமல் நானில்லை என்ற நிலைக்கு தங்கமலர் அவர்களைக் கொண்டுவந்து தனது போராட்ட வாழ்வில் மனைவியையும் இணைத்துக் கொண்டார். தன் காதலுக்காக வெளிநாட்டில் படிக்க கிடைத்த வாய்ப்பை மறுத்து இணுவில் தனியார் வைத்தியசாலையில் மருத்துவத் தாதியாகக் கடமையாற்றினார். இவர்கள் கோண்டாவிலில் ஓர் வாடகை வீட்டினுள் வாழ்ந்து வந்தனர். திரு பாலா அவர்கள் கோப்பாய் பனைதென்னை அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கத்தில் பணியாற்றி தனது சமூக வேலைகளுக்காக குறிப்பிட்ட காலத்தின் பின் அவ்வேலையைக் கைவிட்டார்.

கீழைக்காற்கு இயக்கத்தால் “நவயுகக் காலமன்றம்” உருவாக்கபட்டு அதற்கு பொறுப்பாக திரு.பாலா அவர்கள் நியமிக்கபட்டார். இவரது நாடகங்களால் ஏற்படுத்தப்பட்ட எழுச்சியே ஊரெழு பொக்கனைக்குடியிருப்பாகும். கீழைக்காற்று இயக்கமும் உரும்பிராய் சரஸ்வதி சனசமூகநிலைய மக்களும் போராடி அந்தக் கைங்கரியத்தை நிகழ்த்தினார்கள். அக்காலப்பகுதியில் கூலித்தொழிலாளர்களுக்கான ஒரு சங்கமாக யாப்பு விதிகளுடன் 1979ல் “கிராமிய உழைப்பாளர் சங்கம்” உருவாக்கபட்டது. இந்த அமைப்பின் பிரச்சார நடவடிக்கைக்காக “சிந்திக்க தொடங்கி விட்டார்கள்” என்னும் நாடகம் திரு.பாலாவினால் தயாரிக்கபட்டு 128 மேடைகளில் அரங்கேற்றப்பட்டது. பணக்கார விவசாயிகளுக்கும் வறியகூலி விவசாயிகளுக்கும் இடையிலான முரண்பாட்டையும் வறியகூலி மக்களின் துயர வாழ்க்கையையும் எடுத்துக்காட்டிய இந்நாடகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்நோக்கத்தை நிறைவேற்றியது.

வறியகூலி மக்களின் பிரச்சினைகளை, அவர்களின் வாழ்க்கையினை பிரதிபலித்த "சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்" என்ற நாடகம் மக்களிடையே பெரும் எழுச்சியை ஏற்படுத்தியது. கிராமிய உழைப்பாளர் சங்கமும் மக்களும் கூலி உயர்வுப் போராட்டங்களையும் கசிப்பொழிப்பு, நில உரிமைக்கான போராட்டங்களையும் நடத்தினர். பொக்கணை, மத்தாளோடை, நீர்வேலி, புத்தூர் என பல இடங்களில் அரச காணிகளில் குடியிருப்புக்களை நிறுவினர். திரு பாலாவின் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள் என்ற நாடகத்தை மதிப்பிற்குரிய திரு.மௌனகுரு அவர்கள் உயர்வகுப்பு மாணவர்களுக்காக எழுதிய பாடப்புத்தகத்தில் இணைத்துக்கொண்டார்.

திரு பாலாவும் அவரது நண்பர்களும் பாசறை என்னும் அமைப்பைக் கட்டியெழுப்பி தம் போராட்டங்களை விரிவுபடுத்திய காலம் இலங்கையில் போராடிய விடுதலை இயக்கங்களுக்கு இந்திய அரசு இராணுவப் பயிற்சியை இந்தியாவில் வழங்கியது. இக்காலப்பகுதியில் திரு பாலா சூழ்ச்சி என்னும் நாடகத்தை தயாரித்தார். ஏகலைவன் கதையை மையப்பொருளாக வைத்து இந்நாடகம் எழுதப்பட்டது. இராணுவ நடவடிக்கைகளால் நாடக ஆற்றுகைகள் தடைப்பட்டன. இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு காரணமாக திரு.பாலாவின் தலைமையில் உரும்பிராய், மத்தாளோடை, கோப்பாய் மக்கள் இடம்பெயர்ந்து சிறுப்பிட்டி பாடசாலைகளில் தஞ்சமடைந்தனர். அம்மக்களுக்கான உணவுகளை பாலாவும் அங்கிருந்த இளைஞர்களும் தேடி வழங்கினர். அவர்களைப் பாதுகாத்து மீண்டும் அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பிடங்களுக்கு பாலா அழைத்து வந்தார். திரு பாலாவிற்கும் அவரின் நண்பர்களுக்கும் உயிர் அச்சுறுத்தல் ஏற்பட எல்லோரும் தலைமறைவு வாழ்வை வாழ்ந்தனர். இவ் வாழ்க்கை மேலும் புதிய சிந்தனைகளை உருவாக்கியது. புதிய பல நாடகங்களை எழுதினார்.

சமூகமாற்றத்திற்காய் புலிகளுடன் இணைந்து செயற்பட்டார். 1990களில் கோப்பாய் உதயதாரகை கலாமன்றம் கலைக்கல்லூரியை இணைத்து பல நாடகங்களைத் தயாரித்தார். உரும்பிராய் வடக்கு சரஸ்வதி சனசமூக நிலைய கலைஞர்களுக்கு "கூடி நாம் வாழ்வோம்" உதயதாரகை கலாமன்றத்துடன். "இன்னுமா இருட்டுக்குள்" "சூரியனை சுட்டெரிப்போம்" "இருள் சூழ்ந்த பொழுது" எனப் பல நாடகங்களை தயாரித்து தனக்கென ஒரு தனியிடத்தைப் பிடித்துக்கொண்டார். இவ்வாறு சமூக, தேசிய விடுதலைக்காக தன் பங்களிப்பை தொடர்ந்து செய்து வந்த பாலா அவர்கள் 1995ன் பிற்பகுதியில் தனது கலைஞர் குடும்பங்களுடன் வன்னி நோக்கி இடம் பெயர்கின்றார்.

முத்தையன்கட்டு வலதுகரைப் பாடசாலையில் கலைஞர் குடும்பங்களுடன் பாலாவும் தங்கினார். வறுமை, மலேரியாக் காய்ச்சல் என பெரும் துயர் அவர்களை வாட்டி வதைத்தது. கூட்டமாகச் சேர்ந்து பொச்சுமட்டை சேகரித்து கயிறு திரித்து விற்று ஒரு நேர உணவினை மட்டுமே உண்டு வாழ்ந்தனர் இவர்கள் புலிகளின் உதவியுடன் ஒட்டுசுட்டான் வித்தியாபுரத்திலே சிறு கொட்டில்கள் அமைத்து குடியமர்த்தப்பட்டனர். அங்கும் வறுமையும் நோயும் அவர்களைத் துரத்துகின்றது. தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையை தளரவிடாது கலை பண்பாட்டுக்கழகத்துடன் குறிப்பாக அன்பரசன் அண்ணா, புதுவை அன்பனுடன் தொடர்பு கொண்டு பிரச்சாரத்திற்கான நாடகங்களை தன் கலைஞர்களைக்கொண்டு உருவாக்குகின்றார். இதற்காக சிலகலைஞர்களுக்கு கொடுப்பனவு கலைபண்பாட்டுக் கழகத்தினால் வழங்கப்பட்ட அந்த நிதியை அனைத்துக் குடும்பங்களிற்கும் பகிர்ந்தளித்தார்.

கூட்டாகச் சேர்ந்து வறுமைக்கெதிராக போராடினார். யாழ்ப்பாணத்தில் இருந்தபோது கலைஞர் குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த "கூட்டுப்பண்ணை" அமைக்க வேண்டும் என தனது கலைஞர்களுடன் திட்டமிடப்பட்டதை வன்னியில் செய்றபடுத்த முடிவுசெய்தார். முதற்கட்டமாக முத்தையன் கட்டில் 5 ஏக்கர் நெல்வயலினைப் பெற்று நெல் விதைத்தனர். விளைச்சல் சரியாக கிடைக்காமல் தோல்வியுற்ற போதும் சிறுபோகத்தில் மீண்டும் நெல் விதைத்தனர். வெற்றியேற்றினர். இவர்களின் வாழ்வில் நம்பிக்கை துளிர்விடத் தொடங்கியபோது வவுனியாவிலிருந்து "ஜெயசிக்குறு" இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகியது. மீண்டும் முத்துஐயன்கட்டு வலதுகரைப் பாடசாலைக்கு இடம்பெயர்ந்தார்கள்.

இந்த இடப்பெயர்வுக்கு முகம்கொடுக்க முடியாமல் பல குடும்பங்கள் யாழ்ப்பாணம் சென்றன. 16 குடும்பங்கள் திரு பாலாவின் தலைமையின் கீழ் அவருடன் வாழ்ந்தன. பாலாவும் தங்காவும் மற்றைய கலைஞர் குடும்பங்களும் உடையார்கட்டு நோக்கி இடம்பெயர்ந்து சுதந்திரபுரம் குரவில் பகுதியில் "பகலவன்" குடியிருப்பை தாமாகவே உருவாக்கி அங்கே ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுப்பண்ணையை அமைக்கின்றனர். ஒரே பானையில் சமைத்தனர். இளைஞர்கள் வயல்காணியிலும் மேட்டுநிலத்திலும் வேலை செய்தனர். மதியச்சோற்றை பத்து மணியளவில் சமைத்து அதில் வடித்த கஞ்சியை குழந்தைகளும் வயல் வேலை செய்தவர்களும் காலை உணவாக உண்டனர்.

கிணறுகளை அமைத்தனர். 30அடி நீளம் 15அடி நீளம் அகலத்தில் பெரிய கொட்டகை அமைத்தனர். பண்ணையில் பெண்கள் அங்கு கூடி ஒரே பானையில் சமைத்தனர். கைகளால் தண்ணீர் இறைத்து விவசாயம் செய்து மரக்கறிகளை சந்தைப்படுத்தி தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தனர். பாலா என்னும் கொள்கை வீரன் தன் நண்பர்களுடனும் இளைஞர்களுடனும் இணைந்து கூட்டுப்பண்ணையை சாத்தியப்படுத்தினார்.

பண்யில் அனைவரும் துன்பமின்றி நம்பிக்கையோடு பயமின்றி வாழ திரு.பாலா வழிசமைத்தார். மாதம் ஒரு முறை இறைச்சி அடித்து சாப்பிடடார்கள். பண்ணையில் கலை விழாக்களை கொண்டாடி மகிழ்ந்தார்கள். பண்ணை சிறார்களுக்கு பாலாவும் கீரனும் கல்வி கற்பித்தார்கள். கோப்பாயில் கல்வியில் விடுபட்ட இளைஞர் யுவதிகளை கற்பித்து சாதாரணதரப்பரீட்சையில் சித்தியடைய வைத்த பாலா பண்யிலும் கல்வி கற்காது மூன்று வருடமாக கற்றலிலிருந்து விடுபட்ட மாணவர்களை செஞ்சோலையிலும் பின் உடையார்கட்டு மகாவித்தியாலத்திலும் வயதுக்கேற்ப வகுப்புகளில் இணைத்துப்படிக்க வைத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகந்தி விவசாயக் கூட்டுப்பண்ணை பலருக்கும் ஆச்சர்யமாக அமைந்தது. விடுதலைப்புலிகளின் பொறுப்பாளர்களும் பாலாவின் அரசியல் நண்பர்களும் பண்ணையில் கூடி மகிழ்ந்தனர். பாலாவின் கலைக்கல்லூரி பல தெருவெளி நாடகங்களை தயாரித்து பரப்புரை நடவடிக்கைகளை மேற்கொண்டது. அவ்வேளை ஏனையோர் பண்ணை நடவடிக்கைகளை கவனித்து கொண்டனர். முரசுமோட்டை கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் ஆகிய இடங்களில் வயல்நிலங்களை ஒற்றிக்கு எடுத்து பெரும் நெல்விதைப்பில் ஈடுபட்டு முன்னேற்றத்தைக்கண்டது.

காலப்போக்கில் சமாதானம் ஏற்பட பண்ணையின் குடும்பங்கள் பல யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டன. ஒரு இக்கட்டான சூழலில் ஒன்றிணைந்த கூட்டுப்பண்ணையினூடாக மகிழ்சசியான நம்பிக்கையான வாழ்வை வாழ்ந்த மக்கள் சூழல் மாறியபோது விலகினர். கூட்டுப்பண்ணையானது வாழ்வை நம்பிக்கையுடன் வாழவும், மகிழ்ச்சியாக நல்ல பண்பாட்டுடன் வாழவும் வழிசெய்யும் என்பது மறுக்கப்பட முடியாத உண்மை என்பது வரலாறாகும். சமாதான காலத்தில் வழக்குரை மன்று ஒன்றைத்தயாரித்து புதுவைஅன்பனுடன் (அவர் நாடகமும்) பரப்புரைக்காக புலிகளால் ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். மீண்டும தாய்நாடு திரும்பினர் மீண்டும் யுத்தம் திரு பாலாவும் அவர் மனைவி தங்காவும் கடுமையாக கஸ்ரங்களை அனுபவித்து முள்ளிவாய்க்காலில் கடும் காயம் ஏற்பட அசையமுடியாமல் கிடந்தார். மனைவியை தன்னை விட்டு போகுமாறு வற்புறுத்தியும் அவர் மறுத்து பாலாவுடனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீருக்கும் வழியற்று நின்றார். இராணுவமே அவர்களை மீட்டு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தது.

தனது முன்னைய அரசியல் தோழர்கள் சிலரின் உதவியோடு கொழும்பில் மனைவியுடன் வாழ்ந்தார். தனது மக்கள் இப்போரிலேபட்ட அவலங்களும், இறப்புகளும் புலிகளின் அழிவுகளும் மனதைவாட்ட மாரடைப்புக்கு உள்ளாகி சிகிச்சை பெற்றார். மீண்டும் மனைவியுடன் யாழ் கோப்பாய் தெற்கில் வசிக்கத்தொடங்கினார். வன்னி யுத்தம் பற்றியே ஒரு புத்தகத்தை எழுதி கனடா நாட்டில் வெளியிட்டார்.

தனது சமூகப்பணியை தொடர ஜனநாயகக் கட்சிக்குள் இணைந்தார். மீண்டும் முழுமூச்சாக சமுதாய மாற்றத்திற்காக பாடுபட்டார். பல நாடகங்களை தயாரித்தார். தனது கிராம வரலாற்றை (170 ஆண்டுகள்) "ஒரு கிராமத்தின் பக்தி நெறிப்பயணம்" என்னும் தனது நூலில் பதிவுசெய்தார். யாழ்ப்பாணத்தில் தன்னிடம் நாடகம் பழகியவர்களாலும் கலை அமைப்புக்களாலும் கௌரவிக்கபட்டார்.

பாலாவின் நண்பர் சின்ராசாவினதும் அவர்களால் உருவாக்கபட்ட கிராமிய உழைப்பாளர் சங்கத்தினதும் வரலாற்றை எழுதினார். (அச்சில் இருக்கிறது), வித்தியாசமான ஒரு நாடகப்பயணம் என்னும் நூலை எழுதிக்கொண்டிருக்கும் போது அவரது பயணம் முடிவுறுகிறது.

அவருக்கான கடமைகள் இங்கு நிறைந்திருக்கின்ற போதும் அவர் ஏனோ பயணத்தை முடித்துக் கொண்டார்? அவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகைப் பிரிந்த அன்று எழுதிய கடைசி வரிகள்.

**உன்னால் முடியும் தம்பி**

உலக வரலாற்றின் செல் நெறியைத்எதீர்மானித்ததில் உலகத்து இளைஞர்களே மிக முக்கியமான பங்கை செலுத்தினார்கள் என்பது சரித்திரம் எமக்குரைக்கும் யதார்த்தமான உண்மையாகும். எனவேதான் இளைஞர்களே உலகம் உங்களுடையதே என்றும் காலை இள வெய்யிலைப் போன்று இளமையும் அழகும் வீரமும் செயற்படும் திறனும் கொண்ட உங்களின் மீதே இந்த உலகத்தின் நம்பிக்கை வைக்கப் பட்டுள்ளது என ஓர் அறிஞர் எடுத்துரைத்தார்.

அன்புள்ள பாலசிங்கமண்ணாவே உங்கள் வாழ்க்கைக் காலத்தில் பெற்றோருக்கு பெருமையுள்ள பிள்ளையாய் மனைவிக்கு குறையில்லா வாழ்க்கைத்துணைவனாய் மக்களுக்கு ஒரு போராளியாய் நல்ல தலைவனாய் உங்கள நாடகங்களில் நடித்த பிள்ளைகளுக்கு பாசமான தாய் தந்தையாய் நண்பர்களுக்கு நல்ல தோழனாய் எமக்கு உயர்வை தந்த நல்ல வழிகாட்டியாய் அற்புதமான மனிதராய் வாழ்ந்தீர்கள்.

உங்கள் வாழ்வு இன்று முடிந்தது..! உங்கள் வாழ்க்கைச் சரித்திரம் தொடரப்போகின்றது. தனக்கென்று வாழாது பிறருக்காக வாழும் ஜீவன்களுக்கு மரணம் ஓர் முடிவல்ல. அவர்கள் இறந்தாலும் மறுபடியும் பிறப்பார்கள் வரலாறு நிச்சயம் அவர்களை பிறக்கவைக்கும் ஆம்!


எங்கள் ஒளி தீபமே

வரலாறு உங்களை நிச்சயம் எங்களுடன் வாழ வைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணமான புதிதில் பாலா தங்கா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு.ச.பாலாவிற்கு வழங்கப்பட்ட கௌரவங்களின் போது...










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு.எஸ்.பாலாவின்
## 'ஒரு கிராமத்தின் பக்தி நெறிப் பயணம்" எனும்
## நூல் வெளியீட்டின் போது...





## சுகந்தி விவசாயக் கூட்டுப்பண்ணையில்
## சிறார்களும், இளைஞர்களும்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'குற்றவாளிக்கூண்டில் சரஸ்வதி"
மகன் கீரனின் வழக்குரை மன்றில் நீதிபதியாக பாலா...



திரு.ச.பாலாவின் 'சமுத்திரத்தில் ஒரு சரித்திரம்"
நாடகக் கலைஞர்களுடன் பாலா...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உமக்காக நான் வாழப்போகிறேன்.

ஏன் இவர் திடீரென்று
இப்படிப் போனவர்
வந்த அனைவரிடமும்
கேட்டுக்கொண்டே இருக்கிறேன்...
பதில் இன்றித் தவிக்கின்றேன்
முடிவின்றி அழுகின்றேன்
கரம்பிடித்த நாள் முதல்
துணையாக நின்றவரே
எனை விட்டு ஏன் சென்றீர்
தனியாகத் தவிக்கின்றேன்.
சமூகப் பணி நடுவிலும்
எனை மறவாதிருந்தவரே
தங்கா, தங்கா என
அக்கறையாய் இருந்தவரே
உங்கள் நாட் குறிப்பின்
ஒவ்வொரு பக்கமும்
என் பெயரை அழைக்கிறதே
திடம் ஒன்றைத் தருகிறதே
நான் வாழத்தான் போகிறேன்
முடிக்காத உம் கனவை
முடித்துவைக்க நான்
வாழத்தான் போகிறேன் என்னுயிரே

-உங்கள் அன்பு மனைவி தங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமரர் திரு மு.சின்னராசா அவர்களினதும், கிராமிய உழைப்பாளர் சங்கத்தினதும் வரலாற்று நூலில் தனது உரையிலே இவ்வாறு மனைவிக்கு நன்றி கூறி சமூக மாற்றத்துக்கான தன் மனையாளின் பங்களிப்பை வெளிப்படுத்துகின்றார்.**

எனது சமூக வேலைகளுக்காகவும், எனது எழுத்துப் பணிக்காகவும், தனது விருப்பங்களையும் சந்தோசங்களையும் கரைத்துக்கொண்டு என்மீது அளப்பரிய அன்பைச் சொரிந்து என்னைக் கவனிப்பதில் இன்பம் கண்டு என்னை வாழவைத்துக்கொண்டிருக்கும் என் அன்புக் காதலி தங்காவிற்கு எனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு மகன் ஜெயாவின் உள்ளக்குமுறல்

பிஞ்சுக்காலால் நெஞ்சில் உதைத்த போதும்
அன்பு மழை பொழிந்தாயே!

சிறுவர் பட்டாளத்தில் ஓடி விழுந்த போதும்
பரிவுடன் ஊட்டம் கொடுத்தாயே!

பருவ குழந்தையாய் பருந்துகளின் கண்களில்
மாட்டிய போதும் அடுத்த வீட்டவன் எடுத்துச்
சொன்ன போதும் என்னை நம்பி இருந்தாயே
உன்மடியில் எனக்கு இடம் தந்து
என்னை அரவணைத்தாயே
இனி என் மனக்கவலையை யாரிடம் கூறுவேன்
இனி யார்தான் என்னை அரவணைப்பாரோ

ஆண்டுகள் பல என்னுடன் கழித்தீரே - இன்று
ஆறாத் துயரை என் நெஞ்சில் விதைத்தீர்களே

வாழ்வின் பல ஆண்டுகள் உங்களுடனே வாழ்ந்து
உங்கள் கண்ணிமைபோல் பாதுகாக்க எண்ணியவேளை
காற்றோடு வந்த செய்தி எனை கதிகலங்க வைத்தது

அம்மா அடித்தாலும் பொய்க்கோவம் காட்டி
புறந்தள்ளிவிட்டு அப்புறமாய் அழைத்து
தின்பண்டம் தந்து அணைத்து
நானிருக்கிறேன் என்ற எண்ணம் தோன்றும்படி செய்வீர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசும் போது எங்களை விட்டுக்கொடுக்காமல்
தந்தைக்கு தந்தையாய் புத்தி பல கூறி புரிய வைத்தீர்கள்.
நேரத்திற்கு தகுந்தவாறு பல பொன்மொழிகள் கூறி
எமை வழி நடத்தினீர்கள்.

மண்ணிலே புரண்டவர்கள் என்னும் நாடகத்தின் மூலம்
என்னையும் ஒரு நடிகனாய் நடிக்க வைத்து
அழகு பார்த்த என் அன்பு அத்தானே
நெஞ்சை உருக்கி கண் வழியே கண்ணீராய் வழிய
எமை விட்டுப் பிரிந்து சென்றீரே
உங்கள் அசைவுகள் எனை இன்று கவலையில் ஆழ்த்துகிறதே
என் இன்பம் துன்பம் பாராட்டுக்கள் எல்லாவற்றிலும்
பங்கெடுத்த நீங்கள் இன்று எனக்கு தனியே
துன்பத்தை தந்துவிட்டு பிரிந்து சென்றது சரியோ?

பருவ காலங்களில் என்தாயுடன் நான்
கழித்த நேரங்களை விட
உங்களுடன் கழித்த நேரங்களே அதிகம்
அந்நேர நினைவுகள் இந்நேரத்தில் ரணமாய்
நெஞ்சில் பொழிகிறதே.
ஜெயா ஜெயா என்று கூப்பிடுவீர்களே
இனி உம் குரல் கேளாது உம் முகம் காணாது
செல்லும் நாட்களில்
உங்கள் நினைவுகளை சுமந்து
உங்கள் ஆத்மாவிற்கு அமைதி கிடைக்க
ஆண்டவனை வேண்டுகின்றேன்.

**அன்பு மகன் ஜெயா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புப் பிள்ளைகளின் உள்ளத்தவிப்பு

ஜொய்சி கவி என அனுதினமும் எங்களை அன்போடு
அழைக்கும் எங்கள் சித்தப்பாவே
சிறு வயது தொடக்கம் எமை தோழில் சுமந்த
அந்தப்பசுமையான நினைவுகள் அகலவில்லை
எம் நெஞ்சை விட்டு

அழுது கதறித்துடிக்கின்றோம் - நாம்
கயவன் காலன் உங்களை கவர்ந்து சென்றானோ
அவனுக்கும் உங்கள் பாசம் தேவைப்பட்டதுவோ
அதனால்தான் உங்களை அழைத்துக் கொண்டானோ

எங்கள் அம்மாவின் பிரிவித்துயர் பகிர எண்ணி
அழைப்புக் காட் அடித்து எல்லோரையும்
அழைக்க எண்ணி
வீடெல்லாம் வண்ணம் பூசி
விறுவிறுப்பாய் செய்தீர்கள்
அத்தனையும் உங்களுக்கே செய்தீர்கள் என்று எண்ணி
நினைக்கையிலே மனம் பதைக்குது சித்தப்பா

தோள்மீதும் மார்மீதும் சுமந்தெம்மை வளர்த்தீர்கள்
வாழ்க்கை என்றால் என்ன என்று வரிவரியாய் சொன்னீர்கள்
சூழ்ந்ததெது சொல்வீரோ சுடரதுதான் அணைத்தான்போல்
வீழ்ந்நதிடவே உடலதுவும் விடைபெற்றுப் போனீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்துயர வேண்டுமென்று பகலிரவாய் சொல்வீர்கள்
இடித்திடித்து அதையுரைத்தே எமை உயர வைத்தீர்கள்
மடிந்தது ஏன் சொல்வீரோ மனக்கலக்கம் தந்தின்று
முடிமீது பிறைசுமந்தான் திருவடியை அடைத்தீர்கள்
கனிவான பேச்சதனால் கவர்ந்தெம்மை இழுத்தீர்கள்
மனிதத்தின் மாண்புகளை மதித்தென்றும் நடந்தீர்கள்
மனிதமெங்கே சொல்வீரோ பொன் உடலும் வீழ்ந்தபின்பே
நனிசிறந்தான் திருவடியை நாடித்தான் அடைந்தீர்கள்.

**ஜொய்சி, கவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## “மதிவாணன் பாலா என்றும் மலர்ந்திடுவீர்.”

அன்பான பாலா அண்ணா
பார்க்குமிடமெல்லாம் நடைப்பயணம் செய்தீர்கள்
பார் போற்றவென பல வழிகள் காட்டினீர்கள்
பார்க்கும் தோறும் பாலா அண்ணாவின்
பாசமிகு வார்த்தைகள் ஒலிக்கின்றன.

பொன்னாடை போர்த்தி புகழ்மாலை சூட்டி
பொலிவான விழாவெடுக்க வேண்டுமென
பொறுப்பானவர்களுடன் பேசினேன் - வாழ்க்கை
பொய்யானது என நிலைநாட்டிவிட்டீர்.

பொழுது விடியும் வேளை எம் காதில்
பொல்லாத செய்தியொன்று இடித்துச்சென்றது.
பாலா அண்ணா எம்மை விட்டு
விண்ணுலகம் சென்றுவிட்டாரென்று.

நீங்கா நினைவுடன் பக்திநெறிப் பயணம் என்னும் வரலாற்றை எம் மக்கள் படித்து உணரமுன்பே நீங்கள் நெடும்பயணம் சென்றமை எம்மை ஆறாத் துயரில் மூழ்கி நிற்கின்றமை மறக்கமுடியாததொன்று. இருந்தபோதும் இன்று எம்மை விட்டுப் பிரியும்பொழுதும் “மதிவாணன்” என்ற மங்காப் புகழுடன் எம்முடன் வாழ்கின்றீர்.

“மதிவாணன்” என்றும் மனங்களில் நிலைத்திருக்க மக்கள் எல்லோரும் நீங்கள் தொட்டுச் சென்ற உங்கள் பணிகதைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்வார்கள் என்ற நம்பிக்கையுடன்,
இறுதி அஞ்சலியும், இறுதி யாத்திரையும்
இறுதிவரை நீங்கள் செய்த சேவையும்
இனிதான வழிகாட்டியாக அமையும்

அண்ணா பாலாவின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

அன்புடன்,

**தவமலர் ஜெகநாதன்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணன் பாலாவின் மறைவு சொல்லவும் மெல்லவும் முடியாதது.

நாடகக் கலைக்கு உயிர் கொடுத்து
விடுதலைக்காய் உழைத்து வீதிகளில் நாடகங்களை விதைத்து
சமூகப்பணிக்காய் தன்னை அர்ப்பணித்து
அரசியலில் ஆழ்ந்து பயணித்து
எழுத்துருவில் பலவற்றை எமக்குத்தந்து
உறவுகள் உயர உழைத்து
மனையாள் தனை மதித்து
வாழ்வாங்கு வாழ்ந்த அண்ணர்
காலனின் வேலைக்கு
இலகுவாய் இடம் கொடுத்து
இறைவனடி சேர்ந்ததினால்
கவலையும் கண்ணீரும்
கலந்தே துடிக்கின்றோம்.
துடிக்கும்

**காந்தனும் குடும்பத்தினரும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை வென்ற கலைஞன்

கலை கலைக்காக அல்ல. கலை மக்களுக்காக என்ற எம் மகுட வாசகத்தை தன் இலட்சியமாக வரித்துக்கொண்டு நாடகக் கலையின் வளர்ச்சிக்காகவும் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் மனித விடுதலைக்காகவும் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து அரங்கியல் வரலாற்றிலும் அடிமைப்பட்ட பாமர மக்களின் வாழ்வியலிலும் அதிசயமான மாற்றங்களை நிகழ்த்திக் காட்டிய ஒரு மகா பேராளுமை பாலா என்றால் அது மிகையாகா!

மனித விடுதலைக்கான நீண்ட நெடிய பயணத்திலே பாலா சந்தித்த சவால்களும் சமராடுதல்களும் சாதித்த சாதனைகளும் வியப்புக்குரியவை மட்டுமல்ல, அவை ஆய்வுக்குரியதே.

மனித குலத்தில் சமத்துவம் மலரவேண்டுமெனில் முதற்கண் மனங்கள் மாறுதல் வேண்டும். அறியாமைக்குள் சிக்குண்டு கிடக்கும் சிந்தனைகளை சிறை எடுத்தல் வேண்டும். தாழ்வு மனப் பள்ளத்தாக்கில் வீழ்ந்துகிடக்கும் கொத்தடிமைச் சமுதாயம் உயிர்த்தெழுதல் வேண்டும். காலம் காலமாக மேலாதிக்க வர்க்கத்தின் காலடியில் கிடந்து குனிந்து வளைந்து கொடுத்த கூலியை மட்டுமே கும்பிட்டு வாங்கிய கரங்கள் வான்முகத்தை எட்டும் வரை உயர்ந்திடல் வேண்டும். ஏனென்று கேட்கவும் நாதியற்று வாயில்லாப் பூச்சிகளாய் வதைபட்டு வாழ்நாள் முழுவதுமாய் வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு தொண்டு செய்வதே நம் கடன் எனக் கிடக்கும் தொழிலாளர் வர்க்கத்தின் தோள்கள் நிமிர்தல் வேண்டும். உழைக்கும் மக்களின் உரிமைக் குரல் ஒன்றுபட்டெழுந்து ஓங்கி ஒலித்திடல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவே சமுதாயப் புரட்சிக்கான முதல் முயற்சி என்ற இலட்சியக் கனவோடும், சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள் என்ற வீரியம் மிக்க ஆற்றுகை என்ற விளக்கோடும், இயலாமையின் இருள் மண்டிக்கிடந்த கிராமங்கள் தோறும் இரவுபகல் பாராது சுற்றித் திரிந்த பாலா ஏற்றிவைத்த சுய மரியாதை சுடர்விளக்கு இன்றும் சில கிராமங்களில் எரிந்துகொண்டிருப்பதைக் காணலாம். வருந்தியெடுத்த சமூக விடுதலையின் மறுமலர்ச்சியானது மத்தாளோடைக் கிராமத்தில் பாலாவின் வெற்றியை இன்றும் பறைசாற்றி நிற்பதைப் பார்க்கலாம்.

இது எப்படிச் சாத்தியமானது?

நாடகத்தை மட்டும் போட்டுவிட்டு பாலா போவதில்லை. எந்த மக்களின் பிரச்சனைகளைப் பற்றி நாடகம் பேசியதோ அந்தப் பிரச்சனைகளோடும் தன்னைப் பிணைத்துக்கொண்டு அந்தந்த மக்களோடு அந்த அந்த மண்ணிலே தரித்து நின்று போராடி அரங்கியல் வரலாற்றிலும் அடிமட்ட மக்களின் வாழ்வியலிலும் புதியதோர் அத்தியாயத்தை உருவாக்கிய சரித்திரம் பாலாவுக்கு மட்டும் உரித்தானதன்று.

பாலாவோடு பயணித்து அந்தக் கல்லும் முள்ளும் நிறைந்த புரட்சிக் களத்திலே நின்று தம் சொந்த நலன்களைத் துறந்து தம் குடும்ப சுமைகளை மறந்து உயிர் அச்சுறுத்தல்களுக்கும் அஞ்சாமல் ஓரிரு நாட்களல்ல பற்பல மாதங்களாய் வெற்றி கிட்டும்வரை சளைக்காமல் சமராடிய கலைஞர்கள் சமூக செயற்பாட்டாளர்கள் அந்த மத்தாளோடைக் கிராமத்து மக்கள் அனைவருமே போற்றுதலுக்குரியரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990 களின் முற்பகுதியில் கோண்டாவிலில் இருந்த கலை பண்பாட்டுக் கழகச் செயலகத்தில் பாலாவை முதன்முதலாக சந்தித்து உரையாடியதனூடாக "அவனொரு மாதிரி" என்ற நாடகத்தைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த நாடகம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அன்றைய காலத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்த நினைவஞ்சலி வீர வணக்கக் கூட்டங்களில் அந்த நாடகத்தை மேடை ஏற்றுவதற்கு ஏற்பாடு செய்தேன். மேலும் "கல்லாய் மனிதராய்", "ஆவியில் இனியவளே" போன்ற நாடகங்களும் குடா நாடெங்கும் பல நூற்றுக்கணக்கான நிகழ்வுகளில் மேடையேற்றப்பட்டு மக்களின் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இக் கணத்தில் பாலாவின் துணைவியார் அன்ரியைப் பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும். கலை மூலம் பாலாவுடன் ஏற்பட்ட நட்பு எம் இரு குடும்பங்களிடையே நெருக்கமான குடும்ப உறவாக பரிணமித்தமைக்குக் காரணம் அன்ரி.

கிராமத்துப் பாசையில் சொல்வதென்றால்..
அன்ரி வஞ்சகம் இல்லாத ஒரு வல்ல சீவன். அப்பழுக்கு இல்லாத அன்பும், ஆரவாரமற்ற அமைதியும் உள்ளன்பான உபசரிப்பும், ஆர் எது சொன்னாலும் எழிதில் நம்பிவிடும் அப்பாவித்தனமும் அன்ரியின் இயல்பான சுபாவமாக இருந்தமையால் என்னவோ எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவருக்குமே அன்ரி மீது ஒரு அலாதிப் பிரியம் ஏற்பட்டது.

பாலா என்னை சந்திக்க என் வீட்டிற்கு வரும்போதெல்லாம் என் துணைவியார் முதலில் கேட்பது அன்ரி எப்பிடி சுகமாக இருக்கிறாவா? என்பதுதான். அந்த அளவிற்கு அன்ரி எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தில் மறக்கமுடியாத உறவானார். பாலாவின் நாடகங்கள் எங்கு போட்டாலும் அந்த நாடகக் குழுவோடு அன்றியும் கூடவே வந்து கலைஞர்களுக்கு தன்னாலான உதவிகளை ஆர்வத்தோடு ஆற்றி பாலாவின் கலைப் பணிக்கு பக்க பலமாக இருந்த அன்றிக்கு பாலா கிராமத்துப் போராட்டங்களில் ஈடுபடுவதில் உடன்பாடு இருக்கவில்லை. காரணம் அதன்பால் பாலாவுக்கு ஏதும் ஆபத்து நேர்ந்துவிடுமோ என்ற அச்சத்தைத் தவிர வேறு காரணங்களேதும் இல்லை. ஆனாலும் பாலாவின் அந்த முயற்சிகளுக்கு விரும்பியோ விரும்பாமலோ உதவியுமாய் இருந்துள்ளார்.

அன்றிக்கு பாலா பற்றிய சிந்தனைகளைத் தவிர வேறெந்த அபிலாசைகளும் இருந்ததில்லை. பாலாவுக்காக வாழ்வதே அன்றியின் வாழ்வாக இருந்தது. உண்மையில் அன்றி பாலாவுக்குக் கிடைத்த வரம் என்றே சொல்ல வேண்டும்.

1995 இல் இடம்பெயர்ந்து தனது கலைக் குடும்பத்தோடு வன்னிக்கு வந்த பாலா அங்கும் தன் அரங்கச் செயற்பாட்டை மிக மிக தீவிரமாகத் தொடர்ந்தார். அது ஒரு பொற்காலமென்றால் மிகையில்லை. கலைகளுக்கும், கலைஞர்களுக்கும் வன்னி மண் தந்த வரம் வரலாற்றுச்சிறப்பு மிக்கது.

ஆரென்ன சொன்னாலும் எவரிதை மறுத்தாலும் வன்னித் தெருவெளி அரங்கின் எழுச்சியும், வளர்ச்சியும் ஈழத்தின் நாடக வரலாற்றில் புதியதோர் பரிணாமம் என்ற கருத்துருவாக்கத்தை பல அரங்கியலாளர்களும், அவதானிகளும் ஏற்றுக்கொண்டாலும் கல்விப் புலம் சார்ந்த ஒரு சிலரால் இதை ஜீரணிக்க முடியாதிருப்பதையும் அவதானிக்க முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியில் இடம்பெற்ற தெருவெளி நாடகங்கள் எவையும் தெருவெளி அரங்குக்குரிய பண்புகளைக் கொண்டிருக்கவில்லை என்றும் அதில் பங்குபற்றிய கலைஞர்கள் கூலிக்கு மாரடித்த கூட்டமென்ற தோரணையிலும் ஒரு கல்விப் புலம் சார்ந்த மேதாவி பதிவுசெய்திருந்தார். அத்தோடு உண்மைக்குப் புறம்பான பல தரவுகளையும் பதிவிட்டிருந்தார். இதைப் பார்த்து கோபமடைந்த பாலா அதற்கு பதிலடியாக ஒரு கட்டுரையும் எழுதியிருந்தார். மேலும் கல்விப் புலம் சார்ந்த பல அரங்காளர்களோடும் நெருக்கமான தொடர்பையும் நட்பையும் பேணி வந்த பாலா இது பற்றி பல தளங்களில் விவாதித்தும் உள்ளார்.

பொதுவாக கல்விப்புலம் சார்ந்த அரங்காளர்களும், ஆய்வாளர்களும் கிராமத்து கலைஞர்களையும் அவர்களது படைப்புக்களையும் கவனத்தில் கொள்வதில்லை என்ற கவலை பாலாவின் மனதில் நெடுங்காலமாகவே இருந்துவந்தது. இதை நிவர்த்திசெய்யவேண்டும் என்ற பேரவாவால் கிராமத்துக் கலைஞர்களதும், அவர்களின் படைப்புக்கள் பற்றிய தரவுகளைத் திரட்டுவதிலும் மிகத் தீவிரமாகச் செயற்பட்டதோடு மேலும் இன்றைய எமது சமூகத்தில் பெருகிவரும் பண்பாட்டு சீரழிவுகளையும் வன்முறைக் கலாச்சாரத்தையும் மனித நேயமற்ற முரண்பாடுகளையும் கண்டு மிகவும் கவலை கொண்டதோடு நில்லாமல் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் பேரவாவோடு நிரந்தரமான ஒரு நாடகக் குழுவை உருவாக்கி அதில் பங்குபற்றும் கலைஞர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவு வழங்கும் திட்டத்தையும் வகுத்து, அதற்குரிய நிதியைப் பெற புலத்தில் வாழும் முன்னாள் கலைஞர்களுடனும் மற்றும் சமூக நலன்விரும்பிகளுடனும் கலந்துரையாடி அதற்கான ஒரு நிறுவனக் கட்டமைப்பையும் அண்மையில் உருவாக்கி அதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்திறன்கள் விரிவடையும் வேளையில் பாலாவின் பிரிவுத் துயர் பேரிடியாய் விழுந்துவிட்டது.

நாடகக் கலைக்காகவும் நல்லதோர் சமூக மாற்றத்துக்காகவும் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த ஓர் மகத்தான மக்கள் கலைஞனை இழந்து நிற்கின்றோம். காலத்தை வென்ற இக் கலைஞனின் கனவுகளை இனிச் சுமக்க இங்கு யாருளர்?

வாழட்டும் பாலாவின் வரலாறு
பூக்கட்டும் கலைகள் பலநூறு
மனிதமும் வாழட்டும்.
மானுடம் வெல்லட்டும்.

**புதுவை அன்பன்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாலா எனும் மனிதன்

"நட்பிற்கு வீற்றிருக்கை யாது? எனின் கொட்பு இன்றி
ஒல்லும் வாய் ஊன்றும் நிலை"

ஸ்ரீலங்காவின் இன அழிப்பு யுத்தம் ஓய்ந்தவுடன் 2010ம் ஆண்டு கிராமிய உழைப்பாளர் எனும் தலைப்பில் திரு.பசுபதி சீவரட்ணம், திரு.சசி, திரு.நக்கீரன் ஆகியோருடன் திரு. ாலாவைச் சந்தித்தேன். அன்றிலிருந்து பாலசிங்கத்துடன் நெருக்கமான நட்பு ஏற்பட்டது.

பாலா பழக இனியவர், பண்பாளர். கிராம மக்களின் முன்னேற்றம், சாதி மறுப்புக் கொள்கை, நாடகக் கலை போன்ற விடயங்கள் எங்கள் பேச்சுப் பொருளாக, விவாதப் பொருளாக இருந்திருக்கின்றது.

கிராமங்களின் முன்னேற்றம், அங்குள்ள இளைஞர் யுவதிகளின் மனமாற்றத்தினால் உருவாகும் என நம்பினோம். இதனால் இளைஞர்களின் கல்வி வளர்ச்சிக்காக பல முன்னெடுப்புக்களை இருவரும் இணைந்து செய்தோம். சிறியவர்களின் ஆரம்பக்கல்வி வளர்ச்சிக்கும் முயன்றோம்.

பாலாவின் நாடகங்கள் சமுதாய மேம்பாட்டிற்கு உரிய நல்ல கருத்துக்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தது. வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் அவரது நாடகங்கள் பலவற்றைப் பார்த்திருக்கிறேன். தெரு நாடகம் ஒன்றுக்காக கொக்குவிலில் ஒரு வீட்டில் கலைஞர்களிற்குப் பயிற்சியளிக்கப்பட்டது. (2015 தேர்தல் காலமாக இருக்கலாம்.) அவருடைய நெறியாள்கைத் திறன் கண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியந்தேன். பயிற்சியளிக்கும் போது அவரது கண்டிப்பு, உணவுவழங்கும்போது இருந்ததில்லை. இந்த இயல்பினால் பயிற்சி எடுக்கும் இளங்கலைஞர்கள் அனைவரும் "பாலாவின் பாச வலைக்குள்" கட்டுப்பட்டிருப்பதைக் கண்டேன்.

பாலாவின் எழுத்துக்கள், கட்டுரைகள், பத்திரிகைக்கு எழுதியவை, சிறுகதை, தோழர்களின் வரலாறு, கிராம வரலாறு அனைத்தும் பெரும்பாலும் எனது பார்வைக்கு வந்திருக்கிறது. உரிமையுடன் பல திருத்தங்கள் செய்திருக்கிறேன். திருத்தங்கள் முரண்படாமல் சரி என ஏற்றுக்கொண்டிருக்கிறார். அண்மையில் தோழர் சின்னராசாவின் வரலாற்றை எழுதி என்னிடம் வழக்கம் போல கொடுத்தார். வழக்கத்திற்கு மாறாக அந்த வரலாற்றை (எழுதிய முறையில்) முழுமையாக மாற்றம் செய்யவேணடிய தேவை ஏற்பட்டது. அவற்றை விளக்கியபோது எனது முடிவை ஏற்றுக்கொண்டார். முழுமையான திருப்தி இன்றி கையெழுத்துப் பிரதியை அவரிடம் கொடுத்தேன். தட்டச்சுப் பிரதி எடுத்துத் தரும்படியும் பின்னர் மேலும் பார்வையிடவேண்டும் எனக் கூறினேன். சரி கொண்டுவந்து தருகிறேன் என்றார். காலம் அவரைக் காவுகொண்ட செய்திதான் கிடைத்தது.

பாலாவை இறுதியாகச் சந்தித்தபோது உரையாடிய விடயம் என்றும் மறக்கமுடியாதது. (மதிய நேரம் எனது வீட்டில்) கிளிநொச்சி மாவட்டத்தில் இளைஞர்களைச் சந்திப்பதற்கும் அவர்களுடன் உரையாடவேண்டிய விடயங்களையும் ஆராய்ந்தோம். மே மாதம் பயணம் செய்வதற்கு முடிவு செய்தோம். உரையாடலின் போது சகோதரி தங்கா அவர்களின் உடல்நலம் பற்றியும் பேசினோம். "எனக்கு ஏதாவது நடந்தால் தங்கா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிச்சிடுவார்." என்று பாலா கூறிய வார்த்தைகள் அவரது "ஆவி போன உடலை" கண்டபோது எதிரொலித்தது. எங்களது நட்பு வட்டம் ஏறத்தாள ஒத்த வயதிற்குரியது. இதில் பாலா முன்னமே புறப்பட்டு விடுவார் என்று யாரும் நினைத்திருக்கவில்லை. எமக்கு இடம்பிடித்துவைக்க புறப்பட்டிருக்கிறார் என்றே கருதுகிறேன்.

பாலாவின் மறைவு ஊர் இளைஞர்களிற்கும் நாடகக் கலைஞர்களிற்கும் ஒரு பொறுப்பை செய்தியாக விட்டுச்சென்றுள்ளது. "ஒற்றுமையாகச் செயற்படுங்கள்" என்பதுதான் அது.

"நகுதல் பொருட்டு அன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தல் பொருட்டு."

எனும் குறள் வழி நட்பு பூண்டிருந்த நண்பனைப் பிரிந்துவிட்டோம். அவர் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராரத்திக்கிறேன். அவரது இழப்பால் கதறும் சகோதரிக்கு இறைவன் துணையாக இருக்க வழிபடுவோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! சாந்தி!!!

**அன்புடன் நண்பன்,**

**இரா.செல்வவடிவேல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராமிய உழைப்பின் குரல் ஒன்று ஓய்ந்தது.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்றும்
பெருமை உடைத்திவ் உலகு."

கோப்பாய் தெற்குப் பிரதேசத்தின் வயலும் வயல் சார்ந்த மருதநில மண்ணிலே வனப்பு மிக்க இயற்கைச் சூழல் அமைந்த ஆயித்தன்வளவு என்னும் கிராமத்திலே பொன்னர் செல்லமுத்து வழிவந்த சின்னாத்தை மகள் தங்கம், சரவணமுத்து என்போருக்கு மகனாகப் பிறந்த பாலசிங்கம் என்பவருக்கு சிறுவயதுப் பள்ளிப் பருவம் வேப்பம் காயாகக் கசந்தபோதும் உறவுகளின் அயராத முயற்சியினால் கல்வி கற்று சமூகத்திற்குள் உள்வாங்கப்படுகிறார். சிறுவயர்முதல் கலைநாட்டம் கொண்டவராக கிராமப்பற்றுக் கொண்டவராக உழைக்கும் வர்க்கத்தின் ஏழை பங்காளனாக வாழ்ந்துவந்த காலத்தில் கிராமங்கள் தோறும் உழைப்பாளர்களை ஒன்றுதிரட்டி கிராமிய உழைப்பாளர் சங்கங்களை உருவாக்கி அவர்களின் வாழ்வியல் மேம்பாட்டிற்காக அயராது உழைத்தார்.

இளமைப் பருவத் துடிப்போடு தங்கா என்பவரை வாழ்க்கைத் துணையாகக்கொண்டு வாழ்ந்துவரும் வேளையிலே தன் கிராமத்தின்மீது அளவற்ற பக்தி கொண்ட அமரர் பாலா கிராமத்து உதயதாரகை சனசமூகநிலையம் உதயதாரகை நாடகமன்றம் என்பவற்றினூடாக இளைஞர்களை விழிப்படையச் செய்து பல அரங்க செயற்பாடுகளில் ஈடுபடலானார். அவரது அரங்குச் செயற்பாடுகளினால் பல சமூக விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டமை வரலாறாகும். இளைஞனாக இருந்த காலத்தில் தீண்டாமை வெகுஜன இயக்கப் போராட்டங்களிலும் ஈடுபட்டு சமத்துவ சமூகத்திற்காக அரும்பாடுபட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த மண்ணிலே சொல்லணா வேதனைகளையும், சோதனைகளையும் சுமந்து மண்ணின் விடிவிற்காக பல வீதி நாடகங்களை அரங்கேற்றி விருதுகள் சுமந்த அமரர் பாலா ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று நாடக ஆற்றுகைகளை நடாத்தி உலகத்தால் அறியப்பட்ட ஒருவரானார். உயர்தர மாணவர்களுக்கான நாடகமும் அரங்கியலும் பாடப்பரப்பில் இவரது படைப்பும் உள்வாங்கப்பட்டமை இவரது புலமைத் திறனைப் பறைசாற்றுகிறது எனலாம். தனது எழுத்தாற்றல் ஊடாக கிராம ஒற்றுமையை வலியுறுத்தினார். அமரர் பாலா அவர்களின் கிராமம் தொடர்பான வரலாற்று நூல் என்னும் சிந்தனை "ஒரு கிராமத்தின் பக்திநெறிப் பயணம்" என்பதனடாக செயலுருவாக்கப்பட்டது.

அவரது ஒரு கிராமத்தின் பக்திநெறிப்பயணம் என்னும் வரலாற்று நூலினூடாக 170 வருட கால வரலாற்றை ஆய்வுசெய்துள்ளார். கிராம மக்களின் நம்பிக்கையான தல வரலாறு பற்றியும், குடிப்பரம்பல், மக்களின் நிலப்பிரச்சனை, பண்பாட்டு வாழ்வுமுறை, கலாச்சாரம், உணவுமுறைகள், இயற்கை மருந்து என பல விடயங்கள் வெளிக்கொணர்ந்த பெருமை ஒரு சாதனையாளன் என்பதை நிரூபித்துவிட்டார்.

அவரது நூல் வெளியீடு கிராமத்துப் பொதுநோக்கு மண்டபத்திலே நடைபெற்றபோது அதிலே கலந்து சிறப்பித்தவன் என்ற வகையில் பல இடையூறுகளைத் தாண்டி தனது நூலை வெளியிட்டமை கூட ஒரு வராலாற்றுச் சாதனை என்றே குறிப்பிடவேண்டும். இத்தகைய ஒரு சாதனையாளன் வெகு சீக்கிரத்தில் எம்மை விட்டுச்சென்றமை கிராமத்திற்கு ஒரு பேரிழப்பு ஆகும். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக...

**திரு.பொ.வரதகுலசிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது நெஞ்சத்திலிருந்து விழும் கண்ணீர்த்துளிகள்

நடிகனாய் நெறியாளனாய் பாடகனாய்
ஆளுமைமிக்க தலைவனாய்
சமூக சேவகனாய் நற்பிரஜயாய்
நாம் வாழ வழி காட்டியவனே

என் நினைவில் இருக்கும் உங்கள் எண்ணங்கள்
எனக்கு ஏமாற்றமே தருமென அறிவேன்
ஆனாலும் ஐயனே
எனை என்றும் உன் கருணைப்
பார்வையில் இருந்து நீக்கி விடாதே
மனதில் பெரும் பாரத்துடன் உமது ஆத்மா சாந்திபெற
உன் நினைவுகளுடன் வாழ்வேன் ஐயா

என்னுடைய பணம் என்னுடைய சொத்து
என்ற அலைந்து திரியும் பருந்துகள் மத்தியில்
வாழ விருப்பமின்றி வையகம் சென்றது ஏனோ
உங்களின் சொத்துக்கள நீங்கள் தேடிய மக்கள்
இறந்தும் வாழ்கின்ற பலரில் நீங்களும் ஒருவர்
இவ்வையகம் உள்ளவரை பாலா என்ற ஒருவன்
வாழ்ந்துகொண்டே இருப்பான்
பிறப்பு என்பது சம்பவம்
இறப்பு என்பது சரித்திரம்
என்னும் அப்துல்கலாமின் கூற்றுக்கு நீங்களே ஒரு
எடுத்துக்காட்டு

விழிகளை இழந்தவனாய் தவிக்கின்றேன் - இன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமெனும் கயிற்றினால் என்னைக் கட்டி
பரிதவிக்கவிட்டுச் சென்றாய்
அழுது தீர்த்தாலும் அடங்கவில்லை

மகிழ்ந்த காலம் எல்லாம் மாயமாய் மறைந்தது
போல மீளாத்துயரில் எம்மை விட்டு
இறைவனிடம் சென்றது ஏனோ

அழுகின்றேன் நான் ஒருமுறை
என்னை தழுவ வாருங்கள் உங்களுக்கும் எனக்கும்
இணைபிரியாத உறவு இது

எத்தனை தடைவ என்பெயர் சொல்லி
அழைப்பீர்கள் இன்று என் பெயர்
சொல்லி அழைப்பதற்கு நீங்கள் இல்லை இங்கே

இறைவன் படைத்துத் துடிக்க வைத்தானோ
மாறாத உங்கள் நினைவுகளை மறப்பதெப்படி
நான் சிறை இருந்த போது எனை மீட்க
உன் உயிரை துட்சமென மதித்து
எனை வந்து மீட்டாய்

உன்னுயிரை எடுத்துச் சென்ற காலனிடம் இருந்து
உன்னை மீட்க என்னால் முடியவில்லை
என் கண்முன்னே உன்னுயிர் பிரியும் போது
என்னால் தாங்க முடியவில்லை
இன்னொரு ஜென்மம் என்று இருந்தால்
நான் உங்களுடன் கூடப்பிறக்கவேண்டும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிராத்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**அன்பு மகன்**

**தயா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழைக்கும் மக்களின் விடுதலைக்குக் குரல் கொடுத்தவர்.

அமரர் க.குமாரசாமி அவர்களுடனான உறவுகள் தொடர்புகள் காரணமாக கிராமிய உழைபபாளர் சங்கத்தில் உத்தியோகப் பற்றற்ற வகையில் பல முன்னணித் தோழர்களோடு இணைந்து செயற்பட்ட வேளையில் "சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்" நாடகத்தில் நடிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. அத்துடன் கிராமியக் கலைக்குழுவின் செயலாளராகவும் பணியாற்றினேன். இச் சந்தர்ப்பத்திலேதான் அமரர் பாலசிங்கண்ணையுடனான உறவும் ஏற்பட்டது. இக்காலகட்டங்களில் கிராமிய உழைப்பாளர் சங்க நிர்வாகசபை உறுப்பினர்களிடையே நடைபெறும் விவாதங்களில் நான் நேரடியாகக் கலந்துகொள்ளாது விட்டாலும் அவற்றை அவதானித்துள்ளேன், செவிமடுத்துள்ளேன். அமரர் பாலசிங்கண்ணையுடனும் கி.உ.ச நிர்வாகசபை உறுப்பினர்களது வாதப் பிரதிவாதங்கள், விமர்சனங்கள் நடைபெறும்.

அவர்களுடைய முன்னுதாரணங்களும் வழிகாட்டல்களுமே இன்று என்னை அரசியல் சமூக பொருளாதார ரீதியிலான அறிவை வளர்த்துக்கொள்ளக் காரணமாயிருந்தன. அந்தவகையில் அமரர் பாலசிங்கண்ணை தான் முன்வைக்கும் கருத்துக்களை நிறுவுவதற்கான வாதங்களின் போது அதற்கூடாக அவருடைய ஆளுமையைக் கண்டு வியந்துள்ளேன். இன்று நான் கலை இலக்கியம் அரசியல் சமூகத் தளங்களில் என்னை அடையாளப்படுத்த முடிகிறதென்றால் அமரர் பாலசிங்கண்ணை உள்ளிட்ட பல முன்னணித் தோழர்களிடமிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் தான் காரணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்கப்படுகின்ற மக்களின் அரசியல் பொருளாதார சமூக விடுதலைக்காகப் போராடிய ஓர் சமூக விடுதலைப் போராளியாகவும், நாடகத் துறையில் குறிப்பாக தமிழ் நாடகத்துறையில் நூற்றுக்கணக்கான நாடகங்களை எழுதித் தயாரித்து நெறியாள்கை செய்தவர் என்றால் அது அமரர் பாலசிங்கண்ணை தான். இந்தவகையில் நாடக மாந்தர்களே சமூக விடுதலைப் போராளிகளாகவும் சமூக விடுதலைப் போராளிகள் நாடக மாந்தர்களாகவும் மாறி கதையினைச் சொல்லும் புதிய நாடக வடிவத்தை அறிமுகப்படுத்தினார். இதனையே அவர் செயற்பாட்டிற்கான அரங்கம் எனக் குறிப்பிடுவார்.

அத்துடன் பல கிராமங்களிலிருந்து சமூக விடுதலைப் போராளிகள் பலரது உருவாக்கத்திற்கு காரணமாகவும் பல கலைஞர்கள் நடிகர்கள் உருவாகுவதற்கும் கிராமத்துப் பெண்கள் பலரும் மேடையில் ஆண்களோடு இணைந்து நாடகங்களில் பணியாற்றியதும் அமரர் பாலசிங்கண்ணை அவர்களது முயற்சிகளினாலாகும். பல கிராமங்கள் அரசியல் சமூக பொருளாதார ரீதியிலும் கல்வியிலும் ஓரளவு அடையாளப்படுத்தி நிற்கின்றன என்றால் அமரர் பாலசிங்கண்ணை, அமரர் குமாரசாமி அண்ணை, அமரர் சின்னராசாண்ணை போன்றவர்களதும் 1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் பல முன்னணித் தோழர்களதும் அர்ப்பணிப்புக்களே காரணமாகும்.

எனவே இவர்களைப் போன்ற சமூக விடுதலைப் போராளிகள் விட்டுச் சென்ற பணிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதே அவர்களுக்கு நாம் செலுத்தும் உயரிய அஞ்சலிகளாகும்.

**திரு.வ.மோகநாதன்**
**மின்சாரநிலைய வீதி,**
**சுன்னாகம் தெற்கு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அப்பாவுக்கு ஓர் கடிதம்

என் அப்பாவே என்னைப் பெற்றிடாத தந்தையே என்னைப் பெற்ற தந்தை எனக்கு சோறூட்டினார். என்னைப் பெற்றிடா தந்தை நீங்கள் எனக்கு அறிவூட்டினீர்கள். என்னுடைய நல்வாழ்விற்காக நீங்கள் எவ்வளவோ பாடுபட்டீர்கள். வீட்டிற்குள் இருந்த என்னை வெளி உலகத்திற்குக் கொண்டுவந்தீர்கள். நாடகங்கள் பார்ப்பதற்குத் தடை போட்ட என் பெற்றோருக்கு அறிவான கதைகள் கூறி நாடகத்தில் என்னை நடிக்கவைத்தீர்கள். ஏகலைவன் நாடகத்தில் நான் அன்று நடித்தபோது அழுது நடிக்கச்சொல்லிப் பழக்கியவர். அடித்தபோது அதைப் பொறுத்திடாத நீங்கள் அன்று பழக்கியவரை மாற்றியதை எப்படி மறப்பேன் அப்பா... வாழ்க்கை என்றால் என்னவென்று எங்களுக்குப் பாடம் கற்பித்தீர்கள். சுயநலமற்ற வாழ்க்கை வாழவேண்டும் என்று சொல்லிக்கொடுத்தீர்கள். சுயநலம் பிடித்தவன் அன்பற்றவனாக இதயம் ஏன் என்பதைப் புரியாதவனாக உழைப்பின் பெருமையை அறியாதவனாக ஆடம்பரமே வாழ்வின் அர்த்தம் என எண்ணிக்கொண்டு வாழ முனைகிறான் என்று சொன்னீர்கள். உங்களால் வளர்க்கப்பட்ட பிள்ளைகள் நாங்கள். உங்களைப் பற்றி எங்களுக்குத்தான் தெரியுமப்பா. சுயநலக்காரருக்கும் அயல்வீட்டுச் சண்டையை ஆனந்தமாக ரசிக்கிறவருக்கும் அரைகுறை அரசியல் பேசுகிறவருக்கும் உங்களைப் பற்றி என்னதான் தெரியுமப்பா. நீங்கள் எங்களை விட்டுப் போனாலும் நீங்கள் கற்றுத்தந்த அன்பு, பண்பு, தைரியம் உங்கள் அறிவுரைகள் எப்போதும் எங்களுடன் இருக்கும். நான் இறக்கும்வரை என்னுடனும் இருக்கும் அப்பா. அதுதான் உங்கள் நினைவோடு என்னை வாழவைக்கும் என்று கூறி இக்கடிதத்தை முடிக்கிறேன்.

**இப்படிக்கு,**

**உங்கள், அன்பு மகள்,**

**சகீலா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளைத் தவிக்கவிட்டு

இமைகளை மூடிவிட்டாய்

அகலாது உங்கள் அன்பு நினைவுகள்.

கடமை எல்லாம் முடிந்தது என்றா

காலனவன் உங்களை கவர்ந்து எடுத்து

எம்மை எல்லாம் கண்ணீரில் மூழ்கவிட்டானே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

**இப்படிக்கு**

**உங்கள் செல்லம் வி.தக்சனா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மாமவுக்கு நான் எழுதும் நினைவு மடல்

ஆரம்பக்கல்வியை கற்ற நாள் முதல் அதன் நினைவுகள் கொஞ்சம் அரங்கக்கல்வியை அறிமுகப்படுத்திய நாள் முதல் அதன் நினைவுகள் அதிகம்.

சிங்கமும் முயலும் என்று சிறு நீதிக்கதை மூலம் தந்திர புத்தியை அறிய வைத்தீர். கூடி நாம் வாழ்வோம் என்ற கதை மூலம் கூட்டுறவையும், சமூக நேயத்தையும், சமூகப்பண்பையும் அறிய வைத்தீர். எத்தனை எத்தனை படைப்புக்கள் அத்தனையும் என் கண்முன்னே நிஜமாய் தெரியுதே! வீதியோரத்தில் மோட்டார் சைக்கிளின் சத்தம் கேட்ட உடன் அப்பப்பா வந்து விட்டார் என்று என் கடைசி மகள் ஓடிவந்து கைபிடித்து கதிரையில் அமர்த்திச் சென்ற நினைவை மறப்போமா. அறநெறிக் கல்வியிலே போட்டியிடச் சென்ற பாடசாலை மட்டத்திலே முதல் இடம்பிடித்த "நீயா நானா" அர்த்த நாரீஸ்வரர் என்ற நாடகங்கள் கவியரங்கம், கட்டுரைகள், பேச்சுக்கள் அத்தனையும் முதலிடம் பெற்றதை நாம் மறப்போமா!

என் இரண்டாவது மகளின் திருவள்ளுவரும் திருக்குறளும் என்ற பேச்சும் போட்டிக்காக முதல் நாள் இரவு தொலைபேசியில் சொன்ன போது மறுநாள் அதனை எழுதி முடித்து கற்பக விநாயகர் அரங்கையே அதிரவைத்து முதல் இடம் பிடித்ததை நாம் மறப்பதோ மாமா

இறப்பு நிஜம் தான் ஆனாலும் இப்படியோ வரவேண்டும் கற்றது கொஞ்சம் கல்லாதது அதிகம் சொல்லையும் செயலையும் எழுதி விட முடியாது பேனாவால். என்னுயிர் உள்ளவரை உங்கள் நினைவுகளை என் குடும்பத்தோடு கூடி சமூகத்திற்கு எடுத்துரைப்போம். என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்

**பெறாமகன் விஜிதன் கவிதா**

**பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலா... நீ வாழ்கிறாய்...

நான் நல்லவன். என நினைப்பு புனிதமானது.
பேசுதல் பார்த்தல் சிரித்தல் பழகுதல் ஊர்சுற்றுதல்
இல்லாதவன். எனவே நான் பக்குவமானவன்.
என்னைத் தீண்ட எவருக்கும் இடங்கொடாத புனிதன்.
கண்ட நிண்ட எவரோடும் கண்டபடி பழகாத கொள்கையாளன்.
ஏனென்றால் நான் மாமலையின்
சிகரத்தைத் தொட்ட சிந்தனையாளன்.
ஆடுதல் பாடுதல் ஆய கலைகளை அண்டாதவன்.
கேடுவரும் பின்னேயென வெட்டொன்று துண்டொன்றாக
பேசுவதில் வல்லோன். ஆதலினால் தன்னிகரில்லாத் தலைவன்
விசுவாசிகள் சீடர்கள் தூக்கிச் சுமப்பர் எனைப் பல்லக்கில்
எனவே நானோர் பரமார்த்த குரு.

குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட வல்லோன்.
குடத்துக்குள் குந்தியிருந்து ஒளியை வெளியே தெரியாதபடி
காவாந்து பண்ணும் காலத்தை என் கைவசப்படுத்தியோன்.
குறுங்குழுவாதக் கூடாரமடித்த கொள்கைமாறாக் குணம்
மிக்கோன்.
என்னை உலகம் அறியும். ஊரார் அறிவர்.
நான் போகமுதல் ஒளிவிளக்கைக் கொடுப்பதற்கு
வாரிசு ஒருவரைத் தேடியலைகிறேன்.
ஆரும் கிடைக்காவிட்டால் ஒளி விளக்கோடு
ஊருவேன் உருளுவேன் பேரின்பமடைவேன்.
ஏனென்றால் நானே பெருந்தலைவன்.
என்றிவ்வாறாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானும் தன் பரம்பரையும் வாழ வழிதேடும்
புனிதர்களிடையே புகலிடந் தோடாதவன்.

"பாலா மாஸ்ரர்.... பாலா அண்ணை....
பாலசிங்கம் மாமா எங்களை விட்டுப் போனியோ" என்று
ஆராரோ எவரெல்லாம்
அழுங்குரல் அன்று ஆகாயத்தைத் தொட்டது.
கண்டேன் கலங்கினேன் கண்ணீர் சிந்தினேன்.

தலைவா, பாலா,
உன்வழி நோக்கினேன்.
புனிதங்களைப் புறங்கண்டாய்.
நல்லவன் நானென்று பிறர் சொல்ல நடவேன் என்றாய்.
மற்றவரைப் பார்த்துக் "கொப்பி" பண்ணாமல்
போலச்செய்து புகழ் தேடாமல்
பாலா, நீ நீயாக வாழ்ந்தாய்.
எல்லோரும் நல்லவரே என எல்லோருடனும் பழகினாய்.
எல்லோர் கூடாரத்தையும் குடிலையும் துழாவினாய்.
குதூகலங் கொண்டாய்.
எல்லோரும் நல்லபடி வாழும் வழிதேடி அலைந்தாய்.
அவதிப்பட்டாய். ஆறுதலின்றி வீட்டுப்படலைகளைத்
திறந்தாய். நலம் ஓங்கிடுமாறு வருந்தினாய்.
பாலா, நீ நீயாக வாழ்ந்தாய்.

அன்பை விரும்பினாய்.
கலையை, நாடகத்தை நேசித்தாய்.
கலைஞர் கண்ணீர் விடாத காலம் கனியுமெனக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனாக்கண்டு "கலைவளர் நிலம்" என்பதன்
செயலாளனானாய்.

மதத்தைப் புறந்தள்ளி மணம் புரிந்தாய்.
இதந்தரும் இன்பவழியில் இணைந்திருந்தாய்.
"அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" எனத் திகழ்ந்தாய்.
பாலா, நீ நீயாக வாழ்ந்தாய்.

பார்ப்பாய், சிரிப்பாய், பேசுவாய், பழகுவாய்
ஊர் சுற்றுவாய் உனது இரும்புத் தகடு வைத்த காலோடு.
உனது பக்குவப் பாசாங்கை விட்டெறிந்தாய்
நூறு மலர்கள் மலர விரும்பினாய்.
நூறு கருத்துக்கள் முட்டி மோத விவாதித்தாய்
எல்லோருடனும் பழகினாய்
நாடகர் எல்லோரையும் இன்பமாய் தழுவினாய்
இன எல்லை தாண்டிக் கலைஞரைக் கௌரவித்தாய்.
தனியனாயன்றிக் கூடிச் செயல் செய விரும்பினாய்.

கூட்டுப் பண்ணை விவசாயக் கொடி நாட்டினாய்.
வன்னி யுத்தத்தில் நீ வருந்தினாய்.
பின்னதை நூலாக வடித்தாய்.
"சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்" என
சந்தித்த மக்களை கிராமங்களை நம்பினாய்.
"கிராமிய உழைப்பாளரை" இனங் கண்டாய்.
மாக்ஸீய ஒளி வெளித்தெரிய உழைத்தாய் உவந்தாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குப் பின்னால் எவரும் வரவேண்டுமென எண்ணாய்.
எல்லோரும் அவரவராய் எங்கும் தெரிய வழி பண்ணினாய்.
எங்கெல்லாம் மக்கள் உள்ளனரோ
அங்கெல்லாம் திரிந்தாய் அலைந்தாய் அகமிக மகிழ்ந்தாய்.
எங்கெல்லாம் இயக்கமாய் இணைவரோ மக்கள்
அங்கெல்லாம் ஆனந்தமாய் விசாலித்தாய்.
உன்னை நீ நாட்டவில்லை
ஊரை உலகை மாற்ற விரும்பினாய்.
மகிழ்ச்சி பெறு மார்க்கத்தை நேசித்தாய்
நாடோடியானாய் நாயாய் அலைந்தாய்.
நானிலம் பயன்பெற விளைந்தாய்.
கிளிநொச்சி, வன்னி, யாழ்ப்பாணம், மலையகம், கொழும்பு,
வெளிநாடு என எங்கும் கலைஞரைக் கண்டாய், காட்டினாய்,
கலந்தாய்
பாலா, நீ வாழ்கிறாய்.

பார்ப்பதற்கு எளியன் பழகுதற்கு இனியன்
ஆரெவரெனிலும் பிறர் ஆளுமை சிறக்க முயல்வான்
ஊரார் உறவுகள் அவர்க்காய் உழைப்பான்
ஆரார் கலைஞரெனினும் தேரேற்றி மகிழ்வான்
பாரான் தன்னுடற்திறன் தக்கபடிதான்.

மோட்டபைக் கெடுப்பான் றோட்டெல்லாம் பறப்பான்
படலைகள் திறப்பான் வீடெல்லாம் விரைவான்
அப்பு ராசா குஞ்சு பிள்ளை எனக் கூப்பிட்டழைப்பான்
அள்ளியணைப்பான் அவர்தம் அன்பில் திளைப்பான் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாளில் அவன்போன
றோட்டும் படலையும் மோட்டபைக்கும் தனித்து தவிக்கும்.

தான் பிந்திப்போக வேணும்மெண்டு நினைத்தான் தலைவன்
தனக்கு முன் போக வேணும் தலைவியெனத் தவித்தான்
பிந்தியிருந்து தலைவி தன்னிலை மறந்து
குந்தியிருந்து குளறியழுவாளேயவளெண்டு
தான் கவலை கொண்டு முந்தித்தான் போனான் தனித்து.

எனவே, பாலா...
நீ வாழ்ந்தாய்...
வாழ்கிறாய்...
வாழ்வாய்...

சோ.தேவராஜா- சட்டத்தரணி
(பதில் நீதிபதி)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இறுதிவரை மக்களையும் தேசத்தையும் நேசித்த ஒரு மனிதன்

ஒருவரின் வாழ்வின் தொடக்கமும் முடிவும் தீர்மானிக்கப்பட்டதொன்றே. எங்கே? எப்படி? என்பது இயற்கையின் இயக்கவியல்வின் முடிவில்தான்.

ஒவ்வொரு மனிதனும் வாழ்வின் அர்த்தம் அவனின் கொள்கையில் தன்னை அமிழ்த்திக்கொள்ளும் போது எதிர்கொள்ளும் சவால்களும் சந்திப்புக்களும் அவற்றின் கனதிகளும் மிக ஸ்திரமானவையும் அம்மாதிரியான பரந்த எதிர்கொள்ளல்கள் இவர் வாழிவிலும் நிகழ்ந்தன. பாலசிங்கம் என்னுடன் சந்திப்பு 1977 ஆம் ஆண்டு இலங்கையின் பொது வேலை நிறுத்தம் சம்பந்தமாக ஒரு வேலைத்திட்டத்தில் சந்தித்துள்ளேன். அப்போது அவரின் உழைப்பும் மக்களின் விடுதலையில் ஏற்பட்டுள்ள நம்பிக்கையும் அதன் செயற்பாடும் என்னைக் கவர்ந்தது. அவரின் விடுதலை சம்பந்தமான பார்வையும் இலங்கையின் தேசிய இனங்கள் சமம்பந்தமான பார்வையும் அவர் நோக்கிய பயணம் என்னை அவருடன் இணைத்துக்கொண்டது. எமது மக்களின் உழைப்பவர்களின் விடுதலை இனங்களின் விடுதலையும் எப்படி இணையும் என்ற தெளிவான முடிவும் வாழ்வின் தெளிவான பார்வை அதாவது அவருக்கு பிற்பிறப்பில் நம்பிக்கையில்லை. இருக்கும் காலத்தில் ஒடுக்குமுறைகளுக்காக தொடர்ச்சியான செயற்பாடு பல தளங்களில் ஒரு காலசக்கர விடுதலைப் பயணத்தில் மக்களை ஸ்தாபனப்படுத்தலில் செயற்பாட்டில் தங்களை முழுமையாகவும் பொருளாதார நடவடிக்கையில் செயற்படவேண்டிய தேவையையும் புரிந்துகொண்டு இறுதி மூச்சுவரையும் அதன் சிந்தனையுடன் செயற்பட்ட இயற்கையின் இயக்கவியாளன். ஒரு செயல்வீரன்.

**சசி - இணுவில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன் பாதச் சுவடு

பாலா... "என்னில் எட்டு வயது மூத்தவன் நீ" 81 ல் உன்னோடு தொற்றினேன். கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் இலக்கு துல்லியமானது. பயணம் நீண்டு தொடர்ந்தது. பாசறையில் பலர். கௌரிகாந்தன், சின்னராசா, பாலசிங்கம், சறீதரன், ஜெகநாதன், இராசரத்தினம், குமாரசாமி, குஞ்சு, இராசாத்தி அக்கா, இராசதுரை, சசி, நான் எங்களுடன் உரும்பிராய் வடக்கு சரஸ்வதி சனசமூக நிலைய மக்கள், புன்னாலைக்கட்டுவன் மத்தாளோடை மக்கள்.

கருத்தில் ஒன்றியவர்கள் களத்தில் சங்கமித்தனர். கூலி உயர்வுப் போராட்டங்கள் கசிப்பு ஒழிப்புப் போராட்டங்கள் மே தின ஊர்வலங்கள் அரச காணிக் குடியேற்றங்கள் கல்லடித்து விற்றுக் காசு சேர்ப்பது, விளையாட்டுப் போட்டி, நாடகப் போட்டி என நீண்டது களப்பயிற்சி.

கல்வி வட்டம் கராரான விமர்சனங்கள் பலரையும் புடமிட்டது. தனிமனிதன் அங்கு இல்லை. கருத்தே முதன்மை பெற்றது. தேச விடுதலைப் போராட்டம் சிலரை ஈர்த்தெடுக்க எஞ்சியோர் சிந்தையில் உறுதி பெற்றது சங்கம். முரளி, பானு, பிறேமா, ஐயர், ரஞ்சன் எனப் பலர் சங்கமமாகினர்.

காலத்தின் தேவை கனத்தது. நெஞ்சில் வெகுஜன தளங்களின் அணிவகுப்பில் அரசியல் தலைமையின் அடித்தளம் கட்டிட மாதர் சங்கம், விழிப்பு மன்றம் என விரிந்தது பாசறை. நம்பிக்கை கொடுத்ததால் பலரும் வந்தனர். தீபன், வாணி, விமலேஸ்வரன் போன்றோர் அணிசேர்ந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவலங்கள்" என்ற தெருவெளி நாடகம் மோகனின் முயற்சி அதைச் சீரமைத்து வீதிக்குக் கொண்டுவந்தாய். நம்பிக்கை கொடுத்தது நாடக உலகம். அந்த வேளை முழுநேர உறுப்பினர்கள் பலர் முன்னேறிச் செல்ல நிதிப் பிரச்சனை ஏற்பட்டது. நாடகம் போட்டு காசு சேர்க்கும் நாட்டம் வந்தது. கிராமியக் கலைக்குழு என்ற அமைப்பு உருவாகியது. உந்தன் படைப்பான "சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்" மீளுருவாக்கம் பெற்றது. பட்டி தொட்டி எங்கும் பரபரப்பாய் மேடை ஏறியது. பல்கலைக் கழகம் வரை அதற்கு அப்பாலும் பேசப்பட்டது. காசும் சேர்ந்தது. புகழும் சேர்ந்தது.

சமாந்தரமாக தேச விடுதலைப் போராட்ட நெருக்கடி அமைதி என்ற பெயரால் இந்திய இராணுவப் படையெடுப்பு என்பவற்றால் அனைத்துச் செயற்பாடுகளும் அஸ்தமிக்கத் தொடங்கின. விமலேஸ்வரன் சுட்டுக் கொல்லப்படுகின்றான். அச்சம் குடிகொள்கிறது. நீ எச்சரிக்கை அடைகிறாய். உன்னை காணமுடியாமல் போகிறது. கூட்டுக்கள் குலைந்து போகிறது.

காலப்போக்கில் படைகளின் கெடுபிடி குறைகிறது. கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் இறுதி மூச்சில் தோழர் சின்னராசா, நான், முரளி, மூவரும் சுதேசியக் கலாமன்றத்தை உருவாக்குகிறோம். காலத்தின் தேவைக்குள் மறைந்துகொண்டு களத்தில் நடமாட "நல்லதங்காள்" நாடகத்தை உருவாக்குகின்றோம். மோகன், சைலா, இலங்கேஸ், முரளி, பிறேமினி எனப் பலர் அணிசெய்ய உச்சத்தைத் தொட்டது வரவேற்பு.

நீயும் உன் பிறந்த ஊரான கோப்பாயில் தளம் போட்டாய். நாடகங்களை உருவாக்கினாய். புலிகளுடன் புது உறவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாய். நாடகங்களுடன் புதுப் பிறவி எடுத்து நீயும் நாங்களும் வெளியில் வருகிறோம். நல்ல தங்காளுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறோம்.

முரளி நல்ல தங்காளிற்கு புதுவடிவம் கொடுத்து புலிகளுடன் தனி உறவு பேணி விலகிக் கொள்கிறாள். உன் கைவண்ணத்தில் "ஆவியில் இனியவளே" நாடகம் புலிகளின் குரல் வானொளியின் நான்காம் ஆண்டு நினைவு விழாவிற்காய் சுதேசியக் கலாமன்றத்தால் படைக்கப்படுகின்றது.

தொடர்ந்து கோப்பாய் உதயதாரகையில் "அவளொரு மாதிரி" நாடகம் உன் பெயரை உச்சத்திற்கு கொண்டு செல்கிறது. தொடர்ந்து சுதேசியக் கலாமன்றமும், உதயதாரகை கலை மன்றமும் இணைந்து சூரியனைச் சுட்டெரிப்போம் நாடகத் தயாரிப்பில் ஈடுபடுகின்றன. அது மேன் மேலும் உன் புகழை உயர்த்துகின்றது. கூடவே காலத்தின் தேவை கருதி வீதி நாடகங்களையும் உருவாக்குகிறாய். பழைய தோழர்களின் கூட்டு இப்போது இல்லை. நாடகம் பற்றிய ஆழமான புரிதல் பலருக்கு இல்லை. கடந்த காலம் போல் கராரான விமர்சனங்கள் செய்வதற்கு முடியவில்லை. நாடகப் புயலின் உச்சத்தில் நீ. இந்நிலையில் வன்னி இடப்பெயர்வு.

வன்னிவரை வந்தேன். நாடகத்தைத் தொடர்ந்தோம். எனக்கு வன்னி பிடித்தது. அதன் நிர்வாகம் பிடிக்கவில்லை. விடுபட்டு வந்துவிட்டேன். நீ வன்னியில் நாடகத்தைத் தொடர்ந்தாய். சாதனைகள் புரிந்தாய். வன்னியில் ஓர் கூட்டுப்பண்ணை அமைத்தாய். வன்னி யுத்தம் வேதனையின் உச்சம். துயர் சுமந்து மீண்டு வந்தாய். 2010 இல் புதுப் பிறவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தாய். வடபுலத்தில் கால் பதித்தாய். கிராமிய உழைப்பாளர் மையத்தை உருவாக்கினாய். எனக்குத் தெரியும். நீ ஒருபோதும் ஓயமாட்டாய். வரலாற்றைத் தொகுப்பாக்கிப் புத்தகங்கள் போட்டாய். அச்சாக்கி சிலவற்றை கைகளிலே தந்தாய். அச்சாகப் பலவற்றை எதிர்பார்த்த வேளை, இச் சா வந்து உன்னைப் பிரித்ததேன் சொல்லு... நீ எப்பொழுதும் விழிப்படையா மக்களைச் சுற்றியே இருப்பாய். அவர்களைத் தட்டி எழுப்பி ஒளியேற்றுவாய். அங்கே எப்போதும் நீ பிரகாசிப்பாய். ஓர் இளையோர் அணி எப்போதும் என்னைச் சுற்றியிருக்கும். இப்போதும் அது காத்திருக்கிறது.நீ எட்டாத உயரத்திற்குப் போய்விட்டாய்.

சண்ணின் பாசறையில் முளைவிட்டு கீழைக்காற்று இயக்கத்தில் பயிராகி கிராமிய உழைப்பாளர் சங்கத்தில் பூத்து மணம் வீசி பாசறையில் காய்த்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியில் கனிந்து உதிர்ந்து போனாயே. உன் பாதச் சுவட்டைத் திரும்பிப் பார்க்கிறேன். சொல்லத் துடிக்கும் சேதிகளோடும் சொல்ல முடியா வேதனைகளோடும் துயர் சுமந்து நிற்கும்.

**சி.மகாலிங்கம் குடும்பம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னை எனக்குத் தந்தவர்.

பாலசிங்கம் அண்ணா நல்ல மாற்றங்களை நிகழ்த்திக் காட்டும் அற்புத மனிதர். தான் நேசிக்கும் மக்களுக்காய் சிந்தித்து அவர்களின் முன்னேற்றத்திற்காய் உழைத்து அதற்காகவே வாழ்பவர். மண்ணோடு மண்ணாகிப் போகவிருந்த என்னைத் தத்தெடுத்து தட்டிக்கொடுத்து சமூகப் பெறுமானமுள்ள மனிதனாய் தலைநிமிர வைத்தவர்.

1996 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு இடம்பெயர்ந்தேன். பெற்றவர், உறவுகள், என் காதலியைப் பிரிந்து செய்வதறியாது வீதியில் நின்றேன். எல்லாம் முடிந்ததென்று வேதனையின் உச்சியில் விரக்தியின் விழிம்பில் மதுவுக்குள் என் வாழ்வைத் தேடினேன். பெறுமதி இழந்தேன்... மரியாதை இழந்தேன்... மரணமே மகிழ்வென்று சிந்திக்கத் தொடங்கினேன்...

ஒரு மதியப் பொழுத முத்தையன் கட்டு வீதியில் மரமொன்றின் கீழ் நண்பர்களுடன் குடித்துக்கொண்டிருந்தேன். எனது சிறிய தந்தை (சசி) யுடன் பாலசிங்கண்ணா வந்தார். "அப்பு வீட்ட வந்திட்டுப் போ" சிரித்த முகத்துடன் ஒரே வார்த்தை. கட்டுண்டு போனேன். தலை அசைத்தேன். அவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள். ஒற்றை வார்த்தை எவ்வளவு பலம், அன்பு, பாசம், பலம், நம்பிக்கை, உனக்கு நான் இருக்கிறேன் என ஆயிரம் உணர்வுடன் எனக்குள் இறங்கியது.. இந்த வார்த்தையை இப்படிச் சொல்ல இப் பூமியில் எவருண்டோ?

சிந்தித்துப் பார்த்தேன்... இப்படியே நான் எப்படிப் போவது? முத்தையன் கட்டு குளத்து வாய்க்காலில் நன்றாக மூழுகினேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய மனிதனாய் மாற அந்த முழுக்கு. மாலையானது. அவர்களின் குடியிருப்புக்குச் சென்றேன். சித்தப்பா பாலசிங்கண்ணா வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அன்ரி என்னைப் பார்த்து அன்பாகச் சிரித்தார். பாலசிங்கண்ணா கதைக்கத் தொடங்கினார். அப்பு உன்னைப் பற்றி சசி சொன்னவன். ஏனப்பு இப்படிச் செய்கிறாய்? உன் அறிவை ஏன் வீணாக்கிறாய்? நீ ஆரோக்கியமாய் இருந்தால் தானே அம்மா அப்பாவிடம் போய் நல்லா வாழலாம் என்றார். நானும் சரி என்றேன். ஏன், எதுக்கு, எப்படி வாழவேண்டும்? என்ற விளக்கங்களைக் கூறினார். அன்ரியின் தேனீருடன் விடைபெற்றோம்.

அன்றிலிருந்து அக் குடியிருப்பில் நானும் ஒருவனானேன். சித்தப்பா வீட்டில் வாழத் தொடங்கினேன். குடியிருப்பில் நடைபெற்ற நாடக ஒத்திகைகளை இரசித்துக் கொண்டிருந்தேன். அதில் பாலசிங்கண்ணாவின் இரசனையை இரசித்து மகிழ்ந்தேன். "இன்னுமா இருட்டுக்குள்" கவிதா நிகழ்வு ஆற்றுகைக்காக புதுக்குடியிருப்பு நோக்கிச் சென்றது. நானும் சேர்ந்து சென்றேன். எனது சித்தப்பாவால் அன்று வரமுடியவில்லை. பாலசிங்கண்ணா உடனே கீரன் நீதான் உன் சித்தப்பாவின் பாத்திரத்தை நடிக்க வேண்டும் என்றார். அன்றுவரை நாடக மேடை ஏறியிராத நான் பாலசிங்கண்ணாவின் தைரியத்தில் நடித்து முடித்தேன். பாராட்டினார்.

அங்கு சர்வன் செல்வன் விமல் ரூபன் அண்ணா என பல நல்ல நண்பர்கள் கிடைத்தார்கள். அதே நாடகத்தில் பாரதியார் வேடம் தந்து என்னை நடிக்கவைத்தார் பாலசிங்கண்ணா. அக் குடியிருப்பில் நான் ஓர் செல்லப்பிள்ளை ஆனேன். அன்ரியும் பாலசிங்கண்ணாவும் மிகவும் பாசத்துடன் என்னுடன் பழகினார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடன் இணைந்து கூட்டுப் பண்ணைச் செயற்பாடுகளிலும் இறங்கினேன்.

இடப்பெயர்வுகளால் உடையார்கட்டு குரவயல் பகுதியில் குடியிருப்புக்களை அமைத்தோம். பண்ணைச் செயற்பாடுகள் முன்னேறின. நம்பிக்கையுடன் வாழ்ந்து வந்தோம். பாலசிங்கண்ணா தனது அனைத்து நாடகங்களிலும் முக்கிய பாத்திரத்தை எனக்குத் தந்து என் நடிப்பாற்றலை வெளிக்கொணர்ந்து இரசிகர்களின் மனதில் இடம்பிடிக்க வைத்தார். நாடகங்களைத் தயாரிக்க என்னை ஊக்கப்படுத்தினார். முத்தையன் கட்டு இடதுகரைப் பாடசாலையில் போட்டி நாடகங்களைத் தயாரிக்க நண்பன் சர்வனுடன் என்னை அனுப்பி எனக்கென்று ஓர் இடத்தைப் பிடித்துத் தந்தார். பண்ணைச் சிறார்களுக்கு கல்வி கற்பிக்கும் செயற்பாட்டில் என்னையும் தன்னுடன் இணைத்துக் கொண்டார். பாலைவனத்துப் பூக்கள் குற்றவாளிக் கூண்டில் சரஸ்வதி என்னும் வழக்குரை மன்று எனப் பல நிகழ்வுகளைத் தயாரிக்க வழி கோலினார். நோயுற்று நான் படுத்திருந்த போதெல்லாம் அன்ரியுடன் வந்து தலைமாட்டில் அமர்ந்து தலையைத் தடவுவார். மருந்துக்குப் போகாமலே உடல் தேறிவிடும். பாசத்துடன் என்னை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டுசென்றவர் திரு.பாலசிங்கம் அண்ணா அவர்கள். 2003 இல் சமாதான காலத்துக்குப் பின் நான் ஊருக்கு வந்துவிட்டேன். ஆனாலும் அடிக்கடி பாலசிங்கண்ணாவையும் அன்ரியையும் சென்றுபார்த்தேன்.

காலம் கரைகிறது. எனது காதலி சீதா மனைவியாகிறாள். மகிழ்ச்சியான வாழ்வில் மகன் மகிழினியனும், மகள் குழலியுமாக நாங்கள் நால்வரும் பாலசிங்கண்ணாவின் வழிப்படுத்தலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்வாக வாழ்கின்றோம். யுத்தம் முடிந்து மீண்டு வந்த பாலசிங்கண்ணாவுடன் இணைந்து எனது இணுவில் கிராமத்தில் சில நாடகங்களைத் தயாரித்தேன். அலங்கரிக்கப்பட்ட சாக்கடைகள், குற்றவாளிக் கூண்டில் பெற்றோர் என்னும் வழக்குரை மன்று, மற்றும் சிறுவர் நாடகங்களை நான் தயாரிப்பதற்குப் பெரிதும் உதவினார்.

புத்தகங்களை எழுதி வெளியிட்டார். அதற்காக கிராமத்துச் சூரியன் வெளியீட்டகத்தை உருவாக்கி அதற்கு என்னைத் தலைவராக்கினார். தினமும் அவரைச் சந்தித்தேன். கூட்டுப்பண்ணை அமைக்க வேண்டும், நாடகக் குழுவொன்று அமைக்க வேண்டும் என்ற தன் கனவை அடிக்கடி கூறிக்கொள்வார். தன் உயிர் பிரியும் அன்றுகூட தொலைபேசியூடாக நாளை உனது வீட்டில் கூட்டத்தை ஏற்பாடு செய் நான் வருவேன் எனக் கூறினார். உங்கள் வருனைக்காக இன்றுவரை காத்திருக்கின்றேன். நான் போன் எடுத்தால் "ஓம் சொல்லப்பு" என்ற அன்பான வார்த்தை இனிக் கேட்காதோ... முடியவில்லையே என்னால்...

தன் பிள்ளையை நல்லவனாக்கித் தந்தவர் பாலா என்ற நன்றியுடன் என் பெற்றோரும் தன் கணவனை 95 சதவீதம் பாலசிங்கண்ணாவே உருவாக்கினார் எனக் கூறும் என் மனைவியும், தாத்தா என ஓடிவந்து உங்கள் மடியில் தவழும் என் பிள்ளைகளும் நன்றிக்கடன் தீர்க்கக் காத்திருக்கின்றோம்.

உங்கள் பாதையில் உங்கள் கனவை நினைவாக்க முயலும்

**உங்கள் அன்பு மகன்,**

**ந.நக்கீரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே நாளில் நாங்கள் மேன்மை பெற்றுயரச் சிந்திப்போம்.

- திரு ச.பாலாவால் எழுதப்பட்டது -

மேதினம் -

இது உலகத்தொழிலாளர் தினம்.

உலகத்தில் வாழும் அனைத்து உழைப்பாளர்களும் உயர்வு பெற்று உரிமையுடன் வாழும் வழிகளைப் பற்றி! உழைப்பாளர்கள் அனைவரும் ஒன்றுபட்டு சிந்திக்கும் தினம்..! 18ம் நூற்றாண்டில் நிறைவு பெற்ற கைத்தொழில் புரட்சிக்குப்பின் எழுச்சிபெற்ற மேற்குலக முதலாளித்துவம் பெரும் இலாபத்தைப் பெறும் நோக்குடன் பாரிய கைத்தொழிற்சாலைகளை மேற்குலகில் நிறுவ முயன்றது.

இந்த முயற்சிக்கு பெரியளவிலான மூலதனம் மேற்குலக முதலாளித்துவத்திற்கு தேவைப்பட்டது. இவ் மூலதனத்தை திரட்டும் நோக்குடன் அன்றைய உழைப்பாளர்களின் உழைப்பை மிக மோசமாக முதலாளித்துவம் சுரண்ட முற்பட்டது.

இந்த மூலதன திரட்சிக்காக கைத்தொழில் சாலைகளிலும், நிலக்கரிச்சுரங்கங்களிலும் 18 அல்லது 20 மணித்தியாலங்கள் உழைக்க வேண்டுமென நிர்ப்பந்திக்கபட்டார்கள்!

குடும்பங்களோடு மகிழ்ச்சியாய் இருக்க முடியாமல் தாம் பெற்ற பிள்ளைகளைப் பார்க்க முடியாமல்! இரவும், பகலும், உறக்கமின்றி உழைப்பாளர்கள் உழைத்தார்கள்..!

இவ்வாறு ஓய்வின்றி இராப்பகலாக உழைத்த அந்தத் தொழிலாளர்களுக்கு உரிய கூலி வழங்கப்படவில்லை..! இதனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது குடும்பங்கள் வறுமைக்குள் வீழ்ந்து துடித்தார்கள்.

இக்கொடிய சுரண்டலையும், வறுமையையும் சகிக்க முடியாத தொழிலாளர்கள் 18ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் எட்டு மணி நேர வேலை..! எட்டுமணி நேர ஓய்வு..! எட்டு மணிநேர நித்திரை..! என்ற கோரிக்கையை முன்வைத்து மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள்..!

சிக்காக்கோ நகரில் எழுச்சிகொண்ட இந்தப்போராட்டத்தை நசுக்குவதற்காக அமெரிக்க அரசாங்கம் கடும் முயற்சிகளை மேற்கொண்டது..! வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களை சுட்டுத்தள்ளியது..! போராட்டத் தலைவர்களில் பலரை தூக்கிலிட்டுக் கொன்றது.

இக்கொடிய ஒடுக்க முறையை கண்டு தொழிலாளர்கள் பயந்துவிடவில்லை..! காயப்பட்டு இறந்த தொழிலாளர்களின் இரத்தம் தோய்ந்த உடைகளை கையில் பிடித்தவாறு சிக்காக்கோ நகரெங்கும் தொழிலாளர் எழுச்சி கொண்டனர்.

தொழிலாளர்களது ஒற்றுமையும், உணர்வுமிக்க எழுச்சியையும் கண்ட அமெரிக்க அரசாங்கம் பணிந்தது..! தொழிலாளரின் கோரிக்கையான எட்டு மணி நேர வேலை..! எட்டுமணி நேர ஓய்வு..! எட்டு மணிநேர நித்திரை..! என்பன அவர்களுக்கு வழங்கப்பட்டது..!

தொழிலாளர்களது இப்போராட்டம் வெற்றி பெற்று பல வருடங்களிற்குப் பின் கிட்லரின் ஜேர்மனிய தேசியவாதம் உலக அரங்கில் மேலோங்கியது..! உலகத்திலேயே மிகத்தூய்மையான இனம் ஜேர்மனிய இனம் என்றும் அந்த இனமே உலகத்தை ஆழ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்றும் கிடலர் முழங்கினார்..!

இனவாத அடிப்படையில் கிட்லரால் முன்வைக்கப்பட்ட குறுகிய தேசியவாத அலைக்கு எதிராக..! மக்கள் நலன்சார்ந்த முற்போக்காளர்களின் 2வது அகிலத்தின் சர்வதேசப் பிரகடனமே மே தினப் பிரகடனமாகும். இப்பிரகடனத்தின் மூலம் "உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்" இனவாத அடிப்படையில் எழும் குறுகிய தேசிய வாதத்தை தூக்கி எறியுங்கள் என உலக மக்களை 2வது அகிலம் கோரியது.

உலக மக்கள் அனைவரினதுமட நலனுக்காக மே தினத்தால் முன்வைக்கபட்ட இந்தக்கோரிக்கை இன்று வெற்றி பெற்றுள்ளதா..! எமது உழைப்பாளர்களினதும் மக்களினதும் நிலை இன்று எப்படி உள்ளது என்பதை ஆழமாகச் சிந்திப்பதே இன்றைய மேதினத்தின் பிரதான கடமையாகும்..!

2வது உலக மகா யுத்தத்தின் போது "தூய்மையான ஜேர்மனிய இனமே உலகத்தை ஆள வேண்டும்" என கிட்லரால் முன்வைக்கப்பட்ட கொள்கையை இன்று அமெரிக்கா நிறைவு செய்துள்ளது..! உலகமயமாதல் கொள்கையை நடைமுறைப் படுத்துவதன் மூலம் அமெரிக்காவின் தலைமையில் உலக அரசுகள் அனைத்தையும் கொண்டு வரும் முயற்சியில் அமெரிக்கா முன்னேறி வருகின்றது.

அமெரிக்காவின் இந்த உலகமயமாதல் கொள்கைானது இலங்கை என்ற நாட்டின் திறமையை படிப்படியாக இல்லாமல் ஆக்கி வரும் இன்றை சூழலில்..!

தமிழ் தேசியம் என்னும் நடைமுறைச் சாத்தியமற்ற கொள்கைகளை தமிழ்த்தலைவர்கள் முன்வைப்பதன் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக ஆதிக்கத்திற்கே சேவை செய்கின்றார்கள் என்ற உண்மையை உணராமல் தமிழ் மக்களும்..! கிராமிய உழைப்பாளர்களும் தமிழ் இனவாதத்திற்கு ஆதரவு வழங்கியதன் மூலம்..! உலகத் தொழிலாளர்கள் இரத்தம் சிந்தப்பெற்ற வெற்றியை நாம் தோற்கடித்து விட்டோம் என்பதை இந்த மேதினத்தில் நாம் ஆழமாக புரிந்து கொள்ள வேண்டும் ..!

எனவே கிட்லரின் மேலாதிக்க கொள்கைக்கு மறைமுகமாகச் சேவை செய்யும் தமிழ் இனவாத்தை நிராகரிப்பதன் மூலம் உலகத்தொழிலாளர்கள் ஒன்றுபடுங்கள் என்ற மேதின பிரகடனத்தை வெற்றி பெறச்செய்வோம்..!


இந்த ஒற்றுமை மூலம்..! இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டு..! யுத்தத்தால் சிதைந்துபோன எமது வாழ்வை மீண்டும் கட்டியெழுப்பி..! சுபீட்சத்துடன் தலை நிமிர்ந்து வாழ அனைத்து தமிழ் மக்களும் ஒன்றுபடுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய் நன்றி கொண்டவர்க்கு
# நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள் பல...

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் பண்பின் உறைவிடமாய் எல்லோர் மனதையும் தன் நற் பண்புகளால் கவர்ந்து காலமறிந்து பலனை எதிர்பாராது தன் கடமைகளைச் செய்து எம்மை ஆறாத் துயரில் ஆழித்தி மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வம் சரவணை பாலசிங்கம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் சொல்லி தேற்றிய அனைவருக்கும் செய்தி அறிந்தது முதல் இறுதிவரை தேவைப்பட்ட அனைத்து உதவிகளைச் செய்தவர்களுக்கும் ஈமைக் கிரியைகளில் நேரடியாகக் கலந்துகொண்ட உற்றார் உறவினர் நண்பர்களிற்கும் மலர் மாலை அணிவித்த, மலர் தூவி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும், இன்றைய நாள்வரை பல்வேறு வழிகளில் துணை நின்றவர்களுக்கும் இந் நிகழ்வுகளை பொறுப்பேற்று நடாத்திக்கொண்டிருப்பவர்களிற்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி



**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதன்

விழாமலே வாழ்ந்தான் என்பது

பெருமையல்ல

விழுந்தபோதெல்லாம்

எழுந்தான் என்பதுதான்

பெருமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org